


කල්මුනේ NET
kalmunainet.com உண்மையின் முகம்
පරිමානම්
e-Paper
Parimanam
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 16 | சுபகிருது வருடம் கார்த்திகை 14 | 2022 நவம்பர் 30 புதன்கிழமை | 21 பக்கங்கள் | விலை 70/-



## சீனப் பல்கலையுடனான ஒப்பந்தத்துக்கு மறுப்பு;

### யாழ். பல்கலை உபவேந்தர் துணிகரம்

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பாராட்டு 03



02

## நல்லிணக்கத்துக்கு சமிக்ஞை காட்டியிருக்கும் மாவீரர் தினம்:



05

## சந்திரிகாவின் தீர்வு பொதியை அமுல்படுத்த ஒன்றுபடுங்கள்

## தமிழர்களின் எதிர்கால இலட்சியம்தான் என்ன?

04



## வடிவமைப்பாளராக திரைத்துறையில் கால் பதித்த மதுஷ்

11



போதையில் மயங்கும் சமூகம்;

## உச்சம் தலையில் ஏறும் காமம்

16

# நல்லிணக்கத்துக்கு சமிக்ஞை காட்டியிருக்கும் மாவீரர் தினம்:

# ரணிலுக்கு பச்சைக்கொடி

குணா

*"மாவீரர் தின நிகழ்வுகளுக்கு நெருக்கடிகள் கொடுக்காது அதற்கு இடமளித்தமை நல்லிணக்கத்திற்காக ஜனாதிபதி வழங்கிய சமிக்கை ஆகும். இதற்காக அவருக்கு நன்றி கூறுகின்றோம்''*

**செல்வம் அடைக்கலநாதன்.**
பாராளுமன்ற உறுப்பினர் (த. தே. கூ.)

*"யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர, மக்களுக்கு எவ்வித தடைகளையும் ஏற்படுத்தாத ஜனாதிபதிக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்ட, இளம் சிங்கள சகோதரர்களுக்கும் இந்த உயரிய சபையின் ஊடாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்''*

**சிவஞானம் ஸ்ரீதரன்.**
பாராளுமன்ற உறுப்பினர் (த. தே. கூ.)





தமிழ் தேசிய கூட்டமைப்பின் இரண்டு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உயரிய சபையிலே தெரிவித்த கருத்துக்கள் இவை.

இந்த நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு நல்லிணக்க மாற்றம் இது. அரசாங்கத்தை தொடர்ச்சியாக கண்டித்து வரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, பாராளுமன்றத்தில் மனம் திறந்து பாராட்டு தெரிவித்திருப்பது, இந்த நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கும் திருப்புமுனையாகவே அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவீரர் தினம் என்பது மிகவும் உணர்வுபூர்வமான நிகழ்வாகும். கட்சி அரசியலுக்கு அப்பால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் யுத்தத்தில் உயிரிழந்த தனது உறவுகளை, நினைவு கூரும் நன்னாளே இதுவாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கும் காலத்தில் இருந்து இது அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒரு வார காலம் இந்த தினம் புனித தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டு, 27 ஆம் தேதி மாவீரர் துயிலும் இல்லங்களில் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துவது தான் இந்தத் தினத்தின் சிறப்பம்சம்.

யுத்தம் முடிந்த (2009) காலத்தில் இருந்து, இதனை அனுஷ்டிப்பதற்கு படையினரும் அரசாங்கமும் இதுவரை அனுமதி வழங்கவில்லை. கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே மக்கள் அஞ்சலி செலுத்தி வந்திருக்கிறார்கள். மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு விளக்கேற்ற சென்ற சிலர் கைது செய்யப்பட்ட வரலாறுகளும் இருக்கின்றன.

ஆனால், நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, மக்கள் தங்கள் உயிரிழந்த உறவுகளை நிம்மதியாக நினைவு கூர்வதற்கு அவர் அனுமதித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்திலும், அவர் பிரதமராக இருந்த காலப் பகுதியிலும், அவருடைய சகோதரரான கோட்டா பய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போதும், அவர் ஜனாதிபதியாக மாற்றப்பட்ட பொழுதும், மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கவே இல்லை. விடுதலைப் புலிகள் காலத்தில் உருவாக்கப்பட்ட மாவீரர் சமாதிகள் (துயிலும் இல்லங்கள்) அடித்து தரைமட்டமாக்கப்பட்டதோடு, அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிகளும் வழங்கப்படவில்லை.



ஆட்சியாளர்களின் இந்த கொடூரமான நிலை தமிழ் மக்கள் மத்தியிலே பெரும் உணர்வுபூர்வமான கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்காக சர்வதேச எதிர்ப்புகள் வந்த போதிலும், மஹிந்த ராஜபக்ஷவும் கோட்டாப்பய ராஜபக்ஷவும் அதனை கண்டு கொள்ளவே இல்லை.

"யுத்தத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரையும் நினைவு கூருவதற்கும் அஞ்சலி செலுத்துவதற்கும் உரிமை இருக்கிறது. இதற்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதிக்க வேண்டும்'' என ஐநா மனித உரிமை பேரவை கூட உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு தெளிவுபடுத்தி இருந்த போதிலும், இந்த ராஜபக்ஷக்கள் கண்டு கொண்டதாக இல்லை.

இந்த நிலை, இலங்கைக்கு எதிரான ஒரு சர்வதேச அழுத்தத்திற்கு வழிவகுத்தது என்பதை ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்கள், சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தவில்லை. மாறாக, வீராம்பு அரசியல் பேசி, அப்பாவி சிங்கள மக்களை உணர்ச்சி ஊட்டுவதிலேயே தங்களது அரசியல் காய் நகர்த்தல்களை செய்தார்கள்.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழு, வெளியிட்ட தனது இறுதி அறிக்கையில், உயிர் நீத்தவர்களை நினைவு கூருவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்று ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட குழுக்களும் இதே பரிந்துரைகளை செய்து இருக்கின்றன. ஆனால் மஹிந்த ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவும் அதற்கு எதிரான நிலைப்பாடுகளையே தொடர்ந்தனர்.

இந்த விடயத்தில் ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாடு, அன்றும் இன்றும் மாறவில்லை என்பதே தெட்டத் தெளிவாகி இருக்கிறது.

நல்லாட்சி காலத்தில் அவர் வழங்கிய அனுமதியைப் போலவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இப்பொழுது இருக்கின்ற போதும் அனுமதி வழங்கி இருக்கிறார்.

இந்த நிலைப்பாடு அவருடைய, உளரீதியில் ஏற்பட்டிருக்கின்ற உண்மையான மாற்றமாகவே பார்க்க முடிகின்றது. ஏனென்றால், இவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே இது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால், மிகத் துணிச்சலோடு அவர் இப்படியான நிலைப்பாட்டை அப்போதே எடுத்துக் கொண்டார் என்பது யதார்த்தமான உண்மை.

தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலை நடத்தி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், ஏனைய தமிழ் கட்சிகளும் மன மாற்றம் அடையும் அளவுக்கு, ஜனாதிபதியின் செயல்பாடு இருக்கிறது என்பதை எவரும் மறக்க முடியாது.

ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேசத்தை வசியப்படுத்தும் நடவடிக்கை என சில கட்சிகளால் விமர்சனம் செய்யப்பட்டாலும், இலங்கை அரசியலில் மாற்றம் ஒன்று உருவாகுவதற்கும், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முதலாவது சமிக்கையாகவும் இதனை பார்க்க முடியும்.

பாராளுமன்றத்திலே அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் நன்றி தெரிவித்த சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்த கருத்து சிங்கள மக்களையும் ஈர்த்திருக்கிறது. "சிங்கள இளம் தலைவர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்'' என்று அவர் கூறிய விதம் சபையில் இருந்த சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் நெஞ்சை குளிர வைத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

පරිමානම් Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

## ஆறுதலா..? ஆற்றாமையா..?

சகலரையும் ஒருதாய் உணர்வில் இணைக்கும் தீர்வுத் திட்டத்துக்கு ஜனாதிபதி உழைத்து வருவது அரசியல் களத்தில் புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

வேறுபாடுகளை களைந்து, ஒரு தேசத்தவர்களாக இணையும் அரசியல் கலாசாரத்துக்கு ஜனாதிபதியின் இந்த உழைப்புக்கள் வழிகோலலாம். ஆனால், இந்த உழைப்புக்கு உரமூட்டும் பொறுப்புக்கள் சிறுபான்மை சமூகங்களிடமே உள்ளன. குறிப்பாக தமிழர் தரப்புக்கு இதில், சில வரலாற்றுப் பொறுப்புக்கள் உள்ளன.

சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் எவ்விதப்பிடிக்கோ அல்லது அழுத்தங்களுக்கோ அடிபணியாமல் சிந்திக்கும் தலைவர் ரணில். இவ்வளவு காலமும் எட்டப்பட்ட முயற்சிகளை விடவும் ரணிலின் காலத்தில் முயற்சிக்கப்பட்டவை தான், தமிழர்களுக்கு ஓரளவாவது திருப்பதியளித்திருக் கிறது.

2002 முதல் 2004 வரை, இவரது அரசாங்கம் உச்சளவில் முயற்சித்து ஏதோவொரு தீர்வுக்கு தயாரானதை சர்வதேசமே அறியும். சர்வதேசத்தின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட அந்தக் கால (2002-2004) முயற்சிகள், தமிழ் ஈழத்துக்கான சாயலில் இருந்ததையும் மறப்பதற்கில்லை. இந்நிலையில், தமிழர் தரப்பின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் தென்னிலங்கையின் கண்களில் குத்தியதையும் ஆயுத அமைப்பு இரண்டாகப் பிளந்ததையும் கற்றுக்கொண்ட பாடங்களாக தமிழர் தரப்புக் கருத வேண்டும். இருப்பினும், ஒருசில குறுக்கீடுகளால் ரணிலின் அரசாங்கம் 2004 இல் பதவியிழக்க நேரிட்ட கையோடு, தீர்வுக்கான காலங்கள் கைநழுவிப்போயின.

இந்தப் பாடங்களின் அடித்தளத்திலிருந்து, ரணிலுடன் பயணத்துக்கு தயாராவதே தமிழர் தரப்பின் சமயோசித அரசியலாகும்.

நாட்டின், இப்பபோதுள்ள நிலை, அவ்வாறு இல்லை. தென்னிலங்கையின் சகல அரசியல் தலைமைகளும் சமாதான தேசத்தையே விரும்புகின்றன. பேரினவாதத்தை அரசியல் முதலீடாகப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த சக்திகளும், காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்களால் பல படிப்பினைகளைப் பெற்றுவிட்டன. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பதைப்போல், நமது நாட்டுக்கு வந்துள்ள பசி, பலரது முகத்திரைகளையும் கிழித்திருக்கிறது.

எனவே, ரணிலின் தீர்வுக்கான அறிவிப்பைப் பயன்படுத்த முனைவதே தமிழர் தரப்புக்குள்ள வழி, அடுத்த சுதந்திர தின வைபத்தில், எல்லோருக்கும் விடிவு பிறக்கப் புறப்படுவதே புத்திசாதுர்யமான வியூகம். ஆனாலும், பட்ஜட் விவாதங்களில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையே இடம்பெற்ற வாக்குவாதங்கள், வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் உள்ளூரவுள்ள இடைவெளிகள் குறைந்ததைக் காட்டுவதாக இல்லை. இது, தமிழ் புத்திஜீவிகளுக்குள் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது

ஒரே, தேசியத்துக்காக குரலெழுப்பும் இந்த தமிழ் எம்பிக்கள், தீர்வுக்காக ஒன்றுபடுவார்களா? இந்த ஐய்யத்தை, களையும் அவசியம், தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு, களைய முடியாதுபோயின், கடந்த காலங்களைப் போன்று, கை கூடியுள்ள இந்தக் காலமும் கடந்தோடிவிடும்.இவ்வாறு சுமார் ஐம்பது வருடங்கள், கை கூடாமல் காலங்கள் கடந்ததால்தான் தமிழர்களின் தலைவிதி இவ்வாறு எழுதப்பட்டு விட்டது.

தங்களுக்குள் தீர்வில்லாமல், தாமாக ஒன்றுபடாமல் தென்னிலங்கை அரசியல் தலைவர்களை விமர்சிப்பது, தமிழினத்தை இன்னும் ஏமாற்றவே உதவப்போகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# சீனப் பல்கலையுடனான ஒப்பந்தத்துக்கு மறுப்பு; யாழ். பல்கலை உபவேந்தர் துணிகரம்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பாராட்டு

சீனாவின் விவசாய பல்கலைக்கழகம் ஒன்றுடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கு எடுத்த முயற்சியை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் நிராகரித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை முழுமையாக நிராகரித்த ஸ்ரீ சற்குணராஜாவின் இந்த துணிகரமான செயல்பாட்டுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள தாவது ;

யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், சீன அரசாங்கத்தினால் சீன விவசா யப் பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU), இலங்கை



அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் நவம்பர் 25, 2022 கையொப்பமிட இரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை ஊடகங்களில் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

## தட்டிக்கழிக்கப்பட்டதை தொட்டுப் பார்க்கக்கூட தமிழர் தயாரில்லை



பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக் கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூட தயாராக இல்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் இனம் தோற்று விட்டதாக யாருமே கருதக் கூடாது எனவும் வலியுறுத் தியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை பரிசீலிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று (29.11.2022) நாடாளுமன்றில் தெரிக்கப்பட் டிருந்தது.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

## மாவட்ட அபிவிருத்தி சபை: குமுறி எழுந்த தமிழ் கட்சிகள்

மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர் பான கருத்துக்களை முன்வைத்து பேச்சு வார்த்தைக்கு அழைத்தால் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழ் கட்சி கள் சூளுரைத்துள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாகாண சபைகளுக்கு அபிவிருத்திகளை துரிதப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். சபையில் இதற்கு பதில் அளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவட்ட அபிவிருத்தி சபைகளின் ஊடாக அபிவிருத் திகளை துரிதமாக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறினார்.

“இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்பது, எப்போதோ தமிழ் மக்களால் நிரா கரிக்கப்பட்ட விடயம்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

### ஓமானுக்கு பெண்கள் கடத்தல்:

## சூத்திரதாரிகளை கண்டுபிடிக்கும் ரகசிய நடவடிக்கை ஆரம்பம்

ஓமானுக்கு பெண்களைக் கடத்திய சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவர்களை கண்டுபிடிக்கும் இரகசிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், நேற்று (29) கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட ஓமான் தூதரகத்தின் மூன்றாவது செயலாளரான ஈ.குஷானின் தொலைபேசி பதிவுகள் மற்றும் வங்கி கணக்கு பதிவுகள் ஊடாகவும் இந்த வலையமைப்பு தொடர்பான தகவல்களை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர்களுக்கு சட்ட உதவிகளை பெற்றுக் கொடுக்கவும் இந்த கடத்தலில் ஈடுபடுள்ள முகவர்கள் பணம் செலவிட தயாராகி வருவ தாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## முட்டை விலை ரூ.75: அதிகரிக்க போவதாக அச்சுறுத்தும் சங்கம்

அரசாங்கம் தலையிடாவிட்டால் எதிர் காலத்தில் முட்டை ஒன்றின் விலை 75 ரூபாவை தாண்டும் என அகில இலங்கை சிறிய மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. செய்தியாளர்களிடம் பேசிய அதன் உறுப்பினர் ஏ.டி. ஹர்ஷா கூறியதாவது: ‘இனி வரும் மாதங்களில், அரசு தலையிடாவிட்டால், ஒரு முட்டை, 75 ரூபாயாக உயரும். மூன்று, நான்கு, ஐந்து பேர் இங்கே இருக்கிறார்கள். இங்கே ஒரு மாஃபியா இருக்கிறது.

அரசு தலையிட்டு கோழி குஞ்சு 200 ரூபாவுக்கு வழங்க முடிந்தால் 5 மாதங்களில் முட்டை வியாபாரத்தை புத்துயிர் பெற்று முட்டை நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வர முடியும்’ என சங்கத்தின் உறுப்பினர் ரத்னசி றி குமாரதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

## ஆறுதலா..? ஆற்றாமையா..?

(ஆசிரியர்த் தலையங்கம்...)

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கி, சகலரையும் ஒரு தேசத்தவர் என்ற இலட்சியத்தில் இணைக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க கூறியுள்ளார். இவ்விடயம் தமிழர் அரசியல் களத்தை பரபரப்பாக்கியுள்ளது.

எல்லோரும் ஒன்றிணைந்து ஒருமித்த தீர்வை முன்வைக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளதால், தமிழ் கட்சிகள் ஒன்றி ணைந்து தீர்வைத் தயாரிக்க முயற்சிக்கின் றன. இதற்காக, மிக விரைவில் தமிழ் கட்சிகள் கொழும்பில் ஒன்றுகூட வுமுள்ளன. இதற்குள், பட்ஜட் வாக்களிப் பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நடுநிலை வகித்தது ஏன்? ஆதரவளித்து, இணங்கிச் செல்வதற்கான சமிக்கையை காட்டியிருக்கலாம். பயங்கரவாதத் தடைச்சட்டம், கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு இன்னும் எத்தனையோ இருக்கையில் எவ்வாறு ஆதரிப்பது? யுத்தமே இல்லாத இன்றைய சூழலில், பாதுகாப்புச் செலவினங்களுக்கு இவ்வளவு தொகையை இந்த பட்ஜட் ஒதுக்கியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதத்தில் உள்ள ரணிலுக்கு, ஆதரவளிப்பது தமிழினத்து க்குச் செய்யும் துரோகம் என்றெல்லாம் வியாக்கினங்கள் வழங்க சிலர் விழைகின்றனர்.

இந்த வியாக்கியானங்களை, ஏற்கனவே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் கசப்பான அனுபவங்களுக்குட்படுத்தி ஆராய்வதில்தான் விடிவுக்கான பாதைகள் உள்ளன.

தமிழ் தரப்பில், எதிரும், புதிருமான அரசியல் அதிகரித்து ஆரோக்கிய நகர்வு களுக்கு குறுக்காக நிற்கும் இன்றைய கள நிலவரத்தில், எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு தீர்வை முன்வைக்க முனைந்திருப்பது மாத்திரம்தான், தமிழர்களை ஆறுதல்படுத்து கிறது. இந்த ஆறுதல்கள் ஆற்றாமைகளாகி விடக்கூடாது. இதுதான், தமிழர்களின் ஆதங்கம்.

### மட்டு.மாவட்டத்தை சுற்றுலா தலமாக்க திட்டம்:

## காணிகளை அடையாளம் காண ஜனாதிபதி பணிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்து றையை மேம்படுத்துவதற்காக, காணிகளை அடையாளம் காணும் கலந்துரையாடல் ரணில் விக்ரமசிங்க தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று (30) முற்பகல் நடைபெற்றது.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத் தில் வெருகல் தொடக்கம் மட்டக்களப்பு வரையான கரையோர பிரதேசத்தில், அரச மற்றும் தனியார் காணிகளை அடையாளம் காண்பது தொடர்பில் இங்கு கலந்து ரையாடப்பட்டது.

இந்தப் பிரதேசத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்து மட்ட க்களப்பை 2023 ஆம் ஆண்டில் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன் உட்பட பல பிரதேச செயலாளர்கள் ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ. சூலானந்த பெரேரா, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சி ன் செயலாளர் ஆர்.எம்.சி.எம். ஹேரத் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# தமிழர்களின் எதிர்கால இலட்சியம்தான் என்ன?

“இனி நாங்கள் எப்பவுமே இலங்கை பக்கம் செல்ல மாட்டோம். நாங்கள் இலங்கைக்கு போகவே மாட்டோம். அப்பிடிப் போறதெண்டால் நாங்கள் இங்கேயே தற்கொலை பண்ணிச் சாவோம். நீங்கள்தான் எங்களுக்கு ஏதாவது ஒரு வழிபண்ணி எங்களை யு. என் பொறுப்பெடுத்து காப்பாத்தோனும்” இவ்வாறு கூறியிருப்பவர் வியட்நாமில் இறக்கி விடப்பட்டிருக்கும் ஒரு தமிழ்ப் புலம்பெயரி.

அவர் ஒரு இளம் தாய். ஒரு சிறு பிள்ளையை கையில் வைத்திருக்கிறார். பயணத்தின் போது தாங்கள் அருந்திய அழுக்கான நீர் நிறைந்த ஒரு பிளாஸ்டிக் போத்தலையும் கையில் வைத்திருக்கிறார்.

கனடாவை நோக்கிக் கப்பலில் புறப்பட்ட 303 தமிழர்களில் அவரும் ஒருவர். அவர்கள் பயணம் செய்த படகு கடந்த வாரம் சேதமடைந்து சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது காப்பாற்றப்பட்டு வியட்நாமில் இறக்கி விடப்பட்டிருக்கிறார்கள். இதுபோலவே அவுஸ்திரேலியாவை நோக்கியும் ஆபத்தான கடல்வழிகளின் ஊடாக தமிழர்கள் புலம்பெயர முயற்சிக்கிறார்கள்.

இவ்வாறு கடல் வழியாக வருபவர்களை திருப்பி அனுப்பப் போவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ச்சியாக விளம்பரம் செய்துவருகிறது. கடல் வழியாக மட்டுமல்ல வான் வழியாக வரும் புலம்பெயரிகளையும் திருப்பி அனுப்பப்போவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்திருக்கிறது.

### வெளிநாடுகளுக்கு வெளியேறும் தமிழர்கள்

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் ஓர் ஆங்கில ஊடகவியலாளரோடு உரையாடும்பொழுது ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இலங்கையிலிருந்து பெருந்தொகையான மூளை உழைப்பாளிகளின் விசாவுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், அண்மை காலங்களில் அந்த விண்ணப்பங்களின் தொகை அதிகரித்து வருவதாகவும், அதனால் விசா விண்ணப்பங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை வரலாம் என்ற பொருள்பட அவர் கதைத்திருக்கிறார்.

கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை நோக்கி மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் பெருந்தொகையான தமிழர்களும் சிங்களவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக மேற்படிப்பு அல்லது தொழில் வாய்ப்பு என்ற அடிப்படையில் படித்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு மட்டும் இதுவரையிலும் 500க்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் வெளியேறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னணியில் கொழும்பில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டைப் பெறுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது.

போர்க்காலங்களில் தமிழ் இளையோர் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் பொருளாதார காரணங்களுக்காகவும் நாட்டைவிட்டு வெளியேறினார்கள்.

ஆனால் அண்மைக் காலங்களில் சிங்கள இளையோரும் அவ்வாறு வெளியேறத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களின் கணிசமானவர்கள் மூளை உழைப்பாளிகள். ராஜபக்சக்கள் இந்த நாட்டை எந்த மக்களுக்கு மீட்டுக் கொடுத்ததாக பெருமைப்பட்டுக் கொண்டார்களோ, அந்த மக்களே நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை 2009க்கு பின்னரும் புலப்பெயர்வு நிகழ்கிறது என்பது தான் இக்கட்டுரையின் குவிமையம் ஆகும். அண்மையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் பயிலும் ஒரு மாணவரிடம் கேட்டேன் நல்ல பெறுபேறு கிடைத்தால் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று, அவர் சொன்னார் “வெளிநாட்டுக்குப் போவேன்” என்று.

### புலம்பெயர் சமூகம்

அவருடைய இரண்டு சகோதரர்களும் அவ்வாறு வெளியேறத் தயாராகி வருவதாகவும் அவர் சொன்னார். தமிழ் இளையோரில் வகை மாதிரிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினரை எடுத்து “எத்தனை பேர் நாட்டை விட்டு வெளியேற விரும்புகிறீர்கள்?” என்று கேட்டால். அதற்கு நாட்டை விட்டு வெளியேற விரும்புவோரின் தொகையே அதிகமாயிருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஏற்கனவே நிதி ரீதியாக செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாக எழுச்சி பெற்றுவிட்டது. அந்நாடுகளில் கல்வி ஒரு சுமையாகவோ சித்திரவதையாகவோ இல்லை. அதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு நாட்டில் உள்ள இளைய தலைமுறையில் ஒரு பகுதி வெளியேற முயற்சிக்கின்றது.

இவ்வாறு வெளியேற விரும்பும் பலருக்கும் புலம்பெயர்ந்த பரப்பில் யாரோ ஒரு உறவினர் அல்லது ஏதோ ஒரு தொடர்பு உண்டு. அவ்வாறு புலம்பெயர்ந்து செல்வதன்மூலம் தமது குடும்பத்தின் நிதிநிலையை உயர்த்தலாம், தாமும் ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் நம்புவதாகத் தெரிகிறது. ஒருபுறம் போதைப் பொருள் பாவனை வாள் வெட்டுக் கலாச்சாரம் தொடர்பாக செய்திகள் வெளிவருகின்றன.

இன்னொருபுறம் கடந்த 2009க்கு பின்னரும் நாட்டை விட்டு வெளியேறும் இளையோரின் தொகை குறையாமல் இருக்கிறது. தமிழ் அரசியல்வாதிகளும் கட்சிகளும் தாயகம், தேசியம் சுயநிர்ணயம் என்ற கோஷங்களை விடாது உச்சரிக்கின்றன. ஆனால் தாயகத்தில் தமிழ் மக்களின் ஜனத்தொகை குறைந்து வருகிறது.

## சமூகம் சுருங்கி செல்வதை யாரும் சிந்திப்பதாக இல்லை..!

ஒருபுறம் தாயகத்திலும் டயஸ்போராவிலும் பிள்ளைப் பேறு விகிதம் பெருமளவிற்கு குறைந்து வருகிறது. இன்னொரு புறம் தாயகத்திலிருந்து தொடர்ச்சியாக மணப் பெண்களாக ஒரு தொகுதி பெண்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு சமாந்தரமாக மூளை உழைப்பாளிகளும் கள்ளமாகக் குடியேறுபவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதொடர்பில் தமிழ்க் கட்சிகளிடம் அல்லது செயற்பாட்டாளர்களிடம் தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் ஏதாவது உண்டா? ஒரு மக்கள் கூட்டத்தை தேசிய இனமாகவனையும் பிரதான அம்சங்கள் ஐந்து இனம், நிலம், மொழி, பொதுப்பண்பாடு, பொதுப் பொருளாதாரம் என்பவையே அவையாகும். இதில் இனம் என்று குறிப்பிடப்படுவது பிரயோகத்தில் தமிழ் சனத் தொகையைத்தான். ஏற்கனவே போரில் தமிழ் சனத்தொகையில் குறைந்தது மூன்று லட்சம் பேர் கொல்லப்பட்டு விட்டார்கள். அல்லது காணாமல் போய்விட்டார்கள்.

தப்பிப் பிழைத்தவர்களில் இளையவர்கள் இப்பொழுது புலம்பெயர முயற்சிக்கிறார்கள். இனப்படுகொலை புலப்பெயர்ச்சி என்பவற்றால் ஏற்கனவே சனத்தொகை மெலிந்து வருகிறது. இந்நிலையில் பிள்ளைப் பேறு விகிதமும் குறைந்து வருவதனால் சனத்தொகை மேலும் குறையக் கூடிய ஆபத்து அதிகரிக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம் யாழ். சர்வோதயத்தில் நடந்த ஒரு கருத்தரங்கின்போது அங்கு பிரசன்னமாகியிருந்த நடுத்தர வயதைக் கடந்த சுமார் முப்பது பெண்களிடம் வளவாளர் ஒரு கேள்வி கேட்டார். “நீங்கள் எல்லாரும் எத்தனை சகோதரர்களோடு பிறந்தீர்கள்?” அவர்களில் அநேகமானவர்கள் மூன்றுக்கும் மேற்பட்ட சகோதரர்களோடு பிறந்ததாகச் சொன்னார்கள்.

அதன்பின் வளவாளர் மீண்டும் ஒரு கேள்வி கேட்டார் “உங்களில் எத்தனை பேருக்கு மூன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள்?” துரதிஷ்டவசமாக அங்கிருந்த பெண்களில் மூவருக்குத்தான் மூன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள். ஏனைய அனைவருக்கும் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள்தான். இதுதான் தமிழ்ச் சமூகத்தின் இப்போதுள்ள நிலைமை.

### தாயகத்தை விட்டு வெளியேறும் இளையோர்

தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் பிள்ளைப்பேறு விகிதம் குறைந்து வருகிறது.

அதேசமயம் புலப்பெயர்ச்சியும் தொடர்கிறது. தமிழ் இளையோர் அதேசமயம் புலப்பெயர்ச்சியும் தொடர்கிறது. தமிழ் இளையோர் தாயகத்தை விட்டு வெளியேறுவதனால் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்துக்கும் நிதி ரீதியாக பாதுகாப்பான ஒரு எதிர்காலம் கிடைக்கலாம். ஆனால் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் பார்த்தால் அது தாயகத்தில் சனத் தொகையைக் குறைக்கிறது.

தேர்தல் மைய நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் வாக்காளர்களின் தொகை குறைக்கிறது. எல்லா விதத்திலும் அது தமிழ் மக்களை பலவீனப்படுத்துகிறது. காசிருந்து என்ன பலன்? தாயகத்தில் சனத் தொகை மெலிந்து கொண்டே போகிறது.

ஒரு தேசமாக தமிழ் மக்கள் பெருக்கவில்லை சிறுத்துக் கொண்டே போகிறார்களா? தமிழ் இளையோர் மத்தியில் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற தவிப்பு ஏன் அதிகரிக்கின்றது? இதைக் குறித்து தமிழ் கட்சிகளோ அல்லது செயற்பாட்டாளர்களோ அல்லது புத்திஜீவிகளோ அல்லது குடிமக்கள் சமூகங்களோ சிந்திக்கின்றனவா? சில மாதங்களுக்கு முன்பு வலிகாமம் பகுதியிலுள்ள ஒரு பங்குத்தந்தை என்னை தனது பங்கில் உள்ள இளையோர் மத்தியில் பொருளாதார நெருக்கடிகள்பற்றி பேசுமாறு அழைத்திருந்தார்.

நான் பேசிக்கொண்டிருந்தேன். ஆனால் அங்கு கூடியிருந்த இளையோர் அந்தப் பேச்சை ரசிக்கவில்லை. அக்கறையோடு கேட்கவில்லை. ஒரு கட்டத்தில் பேசுவதை நிறுத்தி விட்டுக் கேட்டேன் “உங்களுக்கு தேவையில்லாத ஒன்றை நான் கதைக்கின்றேனா?” “ஆம்” என்று சொன்னார்கள்.

“உங்களைப் பாதிக்கும் விடயங்களைப் பற்றி அறிய விரும்பவில்லையா?” என்று கேட்டேன். அறிந்து என்ன பயன் என்ற தொனிப்படக் கேட்டார்கள்.

“சரி, எதிர்காலத்தில் என்னவாய் வர விரும்புகிறீர்கள்? உங்களுடைய வாழ்வின் இலட்சியம் என்ன?” என்று கேட்டேன். சுமார் 40 பேர் வந்திருந்த அந்தச் சந்திப்பில் நான்கு பேர்களிடம்தான் எதிர்கால இலட்சியம் இருந்தது. ஏனையவர்கள் கேட்டார்கள் “ஏன் அப்படி ஒரு இலட்சியம் இருக்க வேண்டும்? வாழ்க்கையை இப்பொழுது இருப்பதை போலவே அனுபவித்து விட்டு போகலாமே?” என்று.

(நன்றி - தமிழ்வின்)



# சந்திரிகாவின் தீர்வு பொதியை அமுல்படுத்த ஒன்றுபடுங்கள்

**2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆற்றிய உரை.**

உண்மையாகவே, அன்றைய காலகட்டத்தில், யுத்த காலத்தில் கூடுதலாக நிதித் தேவை இருந்தது. யுத்த காலங்களில் யுத்தம் புரிவதற்காக நீங்கள் வாங்கிய ஆயுதங்கள், தளவாடங்கள் சம்மந்தமாக அதனைப் பார்க்கலாம். அவ்வாறான தேவைகள் இன்று இல்லாத நேரத்தில் கூட இந்த நிதிகள் எதற்காக ஒதுக்கப்படுகின்றது? இன்றும் இந்த நாடு யுத்த மனப்பான்மையில் தான் இருக்கின்றதா? இதனை நாங்கள் மிகத்தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

பாதுகாப்புக்கு அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை நிச்சயமாக குறைத்துக்கொள்ள வேண்டும். அரைவாசியாக கூட வெட்டிக்கொள்ள முடியும். அதேபோல் இன்று நாளாந்த வருமானத்தினை எதிர்பார்த்து வாழுகின்ற மக்கள், அந்த குடும்பங்கள் பட்டினியாக இருக்கின்ற நிலைமையை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அவர்களுக்கான நிவாரணங்கள் சரியான முறையில் கொடுக்கப்பட வேண்டும். இந்த முறை அவற்றிற்கான நிதி ஒதுக்கப் படவில்லை.

## தேசிய இனப்பிரச்சனை இருக்கும் வரை நல்லிணக்கம் சாத்தியமில்லை

இந்த முடிவற்ற பொருளாதார நெருக்கடியால் வறுமை நிலைக்கு கீழ் சென்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படு கிறது. அதேவேளையில், உலக வங்கியின் 20-21 ஆண்டு அறிக்கையின்படி,வறுமை நிலையில் ஏறக்குறைய 13.1 வீதமான மக்கள் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள். ஆனால் 22 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அது 25.6 ஆக உயர்ந்து நிற்கிறது. இவ்வாறு படிப்படியாக மக்கள் வறுமை நிலைக்கு சென்றிருக்கிறார்கள். அவர்களை மீட்டெடுப்ப தற்காக, முக்கியமாக வரவு செலவுத் திட்டத்தினை பொறுத்த மட்டில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவ தாக கூறப்படுகின்றது. ஆனால், இவைகள் செயற்படுத் தப்பட வேண்டும். இதற்கு நிதி எங்கிருந்து வரும்? ஏனென்றால், இந்த நாட்டின் மொத்த கடன் 51 பில்லியன் டொலருக்கு கூடுதலாகும்.இதில் இறையாண்மை வரி 35 பில்லியன் டொலர் இருக்கிறது. ஆனால், இந்த வரவு செலவுத் திட்டம் முழுமையாக ஐ.எம்.எவ் தரக்கூடிய நிதியினை எதிர்பார்த்து போடப்பட்ட வரவு செலவுத் திட்டமாகவே பார்க்கப்படுகின்றது.

56ஆம் ஆண்டின் சிங்களம் மாத்திரம் சட்டம் பற்றி ஜனாதிபதி கூறியிருக்கிறார். அதிலிருந்து ஆரம்பிக்கப்பட் டது தான் இந்த இனப்பிரச்சினையாகும். அதன் சரித்திரத் துக்கு போக வேண்டாம். அதனால், ஏற்பட்ட அழிவுகளோ பெரிது. அதனால் தான், படிப்படியாக ஒரு யுத்தம் உருவாகி யுத்தத்திற்காக அரசாங்கம் கோடிக்கணக்கான பில்லியன் பணத்தினை செலவழித்து இந்த யுத்தத்தினை நடாத்தி, அதற்காக கடனை பெற்று, அதன் வட் டிக்காக கடனைப் பெற்று, இந்த நாடும் அழிந்து பின்னடைவுக்கு செல்ல வேண்டிய நிலைமை வந்தது.

இதனை கூறிய ஜனாதிபதி, அவர் ஒரு சரியான முடிவை எடுக்க வேண்டும். அவரும், மக்களுக்கு பிரபல்யமான தீர்வை எடுக்கக் கூடாது . இன்று இருக்கின்ற நிலையில், நியாயமான அரசியல் தீர்வைத்தான் முழுமையான பிரச்சினைக்கும் தீர்வாக சொல்லுவார்கள். ஏனென்றால், தேசிய இனப் பிரச்சினை இருக்கும் வரை நல்லிணக்கத்தை அடைய முடியாது .

'நல்லிணக்கம்.... நல்லிணக்கம்...' என்று நாங்கள் பேசுகின்றோம். அந்த நல்லிணக்கம் பேசப்பட வேண்டுமென்றால், ஒரு நியாயமான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இந்த அரசியல் தீர்வை முன் வைப்பதற்கு கடந்த காலங்களில் பல விடயங்கள் நடந்திருக்கின்றன. பல முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. எப்போது பார்த்தால் கூட பண்டார நாயக்க காலத்திலேயே செய்யப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் அதுவும் இல்லாமல் போயிருக்கின்றது . தீர்வு முயற்சி களுக்கு கோடிக்கணக்கான காசுகள் செலவழிக்கப்பட்டு இருக்கின்றன.

2020/2021 இல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருந்த காலப்பகுதியில் ஒரு நிபுணர் குழுவை அமைத்திருந்தார். அதற்கு 158 மில்லியன் நிதி ஒதுக்கப்பட் டது. அதிலே இவர்கள் 21 மில்லியன் ரூபாவை செலவு செய்திருக்கிறார்கள் என்பது கணக்காய்வாளர் நாயகம் அவர்களுடைய அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்ட விடயம்.

இது போல கடந்த காலங்களில் பல ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு இவைகள் எல்லாம் கிடப்பிலே போடப்பட் டது. எதுவுமே நடைபெறவில்லை. ஓரளவிற்கு சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க இருந்த காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு ஓரளவிற்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. வருகின்ற சுதந்திர தினத்திற்கு முன்பு அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பேன் என்று ஜனாதிபதி கூறுகின்றார். நல்ல விடயம், அதை நாங்களும் எதிர்பார்த்து இருகின்றோம். இனியும் இதற்காக ஒரு தெரிவு கூட் டங்களை நடத்தி நிதிகளை செலவழிக்காமல், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுடைய தீர்வை மீண்டும் எடுத்து அமுல்படுத்துவதிலே எந்த கஷ்டமும் இருக்காது. இந்த நாட்டிலே ஒற்றுமை கொண்டுவரப்பட வேண்டும் என்றால், சில விடயங்களை விட்டு கொடுத்து அதனை அமுல்படுத்தலாம். அதுதான் எங்களுடைய கருத்து.

இன்று, வடக்கு, கிழக்குக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகளுக்கு என்ன நடக்கிறது என்பதற்கு சில உதாரணங்கள் சொல்ல விரும்புகின்றேன். உலக வங்கி நிதியில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசத்துக்கென, ஏறக்குறைய 7077 குடும்பங்களுக்கென குடிநீர் வழங்க திட்டம் போடப்பட்டது. 1000 மில்லியன் ரூபாய் மதிப்புடைய இந்த திட்டம் மாற்றப்பட்டு தெற்கின் வேறு மாவட்டங்களுக்கு கொடுக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு நிச்சயமாக தமிழர்களை ஏமாற்றமடையச் செய்கிறது.

## சந்திரிகாவின் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது

இன்றும் கூட, நாட்டிலே பொருளாதார பிரச்சி னை இருந்து கொண்டு இருக்கின்ற காலத்திலும் கூட, இவ்வாறான விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றது. இது போன்ற விடயங்களை இந்த அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

திருக்கோணேஸ்வர பிரச்சினை தொடர்பில் அமைச்சர் சென்று பார்த்திருக்கின்றார். ஆனாலும் இது சரியான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். கல்முனை பிரதேச செயலக விடயம் நீண்ட காலமாக இழுபறியில் உள்ளது.

இதே போல பல பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம் கொடுக்கின்றோம்.

அந்த பிரச்ச்சினைக்ளை தீர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால் இது தான் ஒரு நல்ல சந்தர்ப்பமாக நாங்கள் பார்க்கின்றோம். இது எமக்காக அல்ல, இந்த நாட்டிற்காக. இந்த நாட்டினைப் பொறுத்த வரைக்கும் நாடு பின்னடைவில் இருக்கின்ற போது, மக்கள் அனைவரும் ஒற்றுமையாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலம், நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை தமிழர்கள், சிங்களவர்கள்,முஸ்லீம்கள் அனைவரும் உருவாக்க வேண்டும். இன்று இதை செய்ய தவறுவோமாக இருந்தால், இந்த நாட்டின் பின்னடைவை எவருமே தடுக்க முடியாது. இதை விட மோசமாக போகும்.

ஒன்றை நாங்கள் பார்க்க வேண்டும், இன்று இருக்கின்ற நிலையிலே பல வைத்தியர்கள் பொறியியலாளர்கள் பலர் நாட்டை விட்டு ஓடிக்கொண்டே இருக்கின்றனர். இது நாங்கள் அறிந்த விடயங்கள். இந்த நாட்டிலே வாழ முடியாது என்பதற்காக தற்காலிகமாக சென்றாலும், அவர்கள் அங்கு தம்மை ஸ்திரப்படுத்திவிட்டால் நிச்சயமாக திரும்பி வர மாட்டார்கள். வைத்திய நிபுணர்கள் பலர் சென்றிருக்கின்றார்கள். இந்த நாட்டிற்கு இது மிக பெரிய பிரச்சினையாக உள்ளது. அவர்களுடைய காரணம், வைத்திய தொழிலை சரியாக செய்ய முடியாமல் இருக்கிறது. உபகரணங்கள் இல்லை, வைத்தியசாலை களில் மருந்து இல்லை, இவைகளையாவது அரசாங்கம் தராத பட்சத்தில் இங்கு இருந்து நாங்கள் என்ன செய்வது என்ற எண்ணத்தில் விட்டு சென்றிருக்கின்றார்கள்.

## நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பிரச்சனைக்கு தீர்வு காண சகலரும் ஒன்றுபடுவோம்

இப்படியாக மக்கள் அனைவருமே ஒரு குழப்ப நிலையில் இருக்கின்றார்கள். இந்த குழப்பங்கள் தீர்க்கப்பட வேண்டும். குழப்பங்கள் தீர்ப்பதென்றால் ஒன்று பொருளாதார ரீதியாக இந்த நாடு முன்னேற வேண்டும். இந்த தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வு காண வேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியமோ, சமஸ்டி முறையிலோ மக்களை திருப்திக்கொள்ள கூடிய விதத்தில், நியாயமான முறையில் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு இங்குள்ள 225 பேரும் ஒத்துழைக்க வேண்டும். இதனை நீண்ட காலமாக விட்டுக்கொண்டு போக முடியாது. சுதந்திரம் கிடைக்கப்பெற்ற காலத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்ட்து.

பாகிஸ்தானிய இந்திய குடியுரிமை சட்டத்தின் கீழ் 10 இலட்சம் மக்கள் உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள். தொடர்ந்து, இன்று கூட இந்த வரவு -செலவுத்திட்டத்திலே மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கக்கூடிய இந்த மலையக தமிழர்களுக்கு ஒரு நிவாரணத்தினை குறிப்பிட்டிருக்கலாம். அப்படி ஒரு இனம் இருக்கிறது என்று கூட வரவு செலவுத் திட்டத்தில் இல்லை. மிகவும் கஷடப்பட்ட இனம். எப்படி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் துன்பப்படுகிறார்களோ அதேயளவு துன்பம் அவர்களுக்கும் இருக்கிறது.இவற்றினை நிவர்த்தி செய்வதற்கு அரசு கட் டாயமாக முயற்சி எடுக்க வேண்டும்.

இவ்வாறு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தின் (PLOT ) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் உரையாற்றினார்.

# சமூக விமோசனம்சார் கணிப்பீட்டு அரசியலே முஸ்லிம் தலைமைகளுக்கு அவசியம்

✍ நிப்ராஸ்

ரணிலின் கன்னிப் பாதீடு வெற்றிபெற்ற கையுடன்,அடுத்த கட்ட வியூகங்கள் களமிறக்கப்படுமென ஆங்கிலப் பத்திரிகைகள் (20) ஆரூடம் கூறியுள்ளன. தேசியளவில், தனது இருப்பைப் பலப்படுத்த விரும்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எவரும் எதிர்பாராத தேர்தலுக்கே தயாராகுவார். இதுதான், இப்பத்திரிகைகளின் ஆரூடம்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து, எதிர்பார்க்கப்படும் 2. 9 பில்லியன் டொலர் கிடைத்ததும் உஷாரடையவுள்ள இவர், நாட்டின் நிதி நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில் எடுக்கவுள்ள சில நடவடிக்கைகள் இவரது இமேஜை உயர்த்துமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதையும் இந்த ஆங்கில நாளேடுகள் சுட்டிக் காட்டத் தவறவில்லை. சிறுபான்மை கட்சிகளின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துதல், இதில் வெற்றிபெற்று ஏனைய பிடிகளிலிருந்து விடுபடல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உதவிகளைப் பெறக்கூடிய சர்வதேச வாசல்களைத் திறந்து விடல் என்பவைகள்தான், பட்ஜட் வெற்றிபெற்ற கையுடன் களமிறங்கவுள்ள வியூகங்கள்.

தென்னிலங்கையில் சரிவுக்குள்ளான சக்திகளின் ஆசீர்வாதத்துடன் ஆட்சியிலிருப்பது, தமக்கும் ஆபத்தையே ஏற்படுத்துமென இவருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இதனாலேயே, அரசியல் ஸ்திரத்துக்கு ஜனாதிபதியும் அவசரம் காட்டுகிறார். இப்போதுள்ள நிலையில், இந்த ஸ்திரத்துக்கு இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று பாராளுமன்றத் தேர்தல், இரண்டு ஜனாதிபதித் தேர்தல்.

2024 நவம்பர் வரைக்கும் காத்திராமல் 2023 நவம்பரில் தேர்தலுக்குச் செல்வதா? 2025 ஓகஸ்ட் வரை பொறுமை காக்காமல், 2023 மார்ச்சில் பாராளுமன்றத்தை கலைப்பதா? இதுபற்றிய பல கோணங்களிலே ரணிலின் மூளை சுழல்கிறது. இதனால்தான், முடிவடையவுள்ள உள்ளூராட்சி சபைகளைப் பற்றி பொருட்படுத்தாமல் உள்ளார் அவர். உள்ளூராட்சி தேர்தலை நடாத்தி அரசாங்கத்தின் ஸ்திரத்தை அறிய முடியாது. சர்வதேசம் வழங்கவுள்ள உதவிகள் எல்லாம் அரசாங்கத்தின் ஸ்திரத்தைப் பொறுத்தே இருக்கப் போகிறது. இதனால், மேற்சொன்ன இரண்டு தேர்தல்களில் ஒன்றுக்குத்தான் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

பாராளுமன்றத்தை வெல்வதற்கான பலம் ஜனாதிபதியாக இருப்பதால் கிடைத்து விடுமா? அல்லது பாராளுமன்றத்தை வென்று விடுவதால் ஜனாதிபத் தேர்தலில் வெல்லும் வாய்ப்புக் கிடைக்குமா?

## “ ராஜபக்ஷக்களை ஒழிக்க வியூகங்களை வகுத்தே ஆக வேண்டும்



நமது நாட்டு அரசியலைப் பொறுத்த வரைக்கும் இவையிரண்டுக்கும் ஆருடங் கூற இயலாத நிலைதானுள்ளது. அதுவும் 22 ஆவது திருத்தம் எனும் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் உள்ள நிலையில்? சுதந்திர ஆணைக் குழுக்களிடம் அதிகாரங்கள் குவிக்கப்படும் சூழலில், இன்னும் தன்னை ஆசீர்வதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழுதாக வீழாத நிலையில் எதனைத் தீர்மானிப்பார் ரணில். இதுதான் இன்றுள்ள கேள்வி?

அமெரிக்காவிலிருந்து பஷில் ராஜபக்ஷவும் வந்திறங்கிய கையோடுதான், களம் சூடுபிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவு காலமாக இழுத்தடிக்கப்படும் புதிய அமைச்சர்கள் நியமனத்தை இன்னும் இழுத்தடிப்பது, ஸ்ரீங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவை வலுப்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

இதனால், பட்ஜட்டின் மூன்றாவது வாசிப்புக்கு முன்னர், தங்களது பட்டியலில் உள்ளோருக்கு அமைச்சுக்களை வழங்குமாறு பஷில் அழுத்தம் கொடுக்கலாம். இது, நிராகரிக்கப்படின் பட்ஜட்டின் எதிர்காலமும் ஆரூடதத்துக்கு உட்படாமலே போகும். இப்போதுள்ள நிலையில், ராஜபக்ஷக்களை அரவணைத்து ஜனாதிபதித் தேர்தலில் வெல்வது. வென்ற கையுடன் சத்தியப் பிரமாணம் செய்யாது எஞ்சிய காலத்தையும் அனுபவித்த பின்னர், 2024 நவம்பரில் சத்தியப் பிரமாணம் செய்வது. இந்தத் தவணைக் காலத்தின் மூன்றிலொரு பகுதியை கைம்மாறாக ராஜபக்ஷக்களுக்கு வழங்குவது. தயாராகி வரும் இத்திட்டத்துக்கு, ஏதோ, கனிந்து வருங்காலத்தை கையிலெடுத்துள்ளார் ரணில்.

இதனால், சகோதர தமிழ் கட்சிகளும் மலையக சமூகக் கட்சிகளும் பேரம் பேசும் வழிகள், வியூகங்களில் கவனத்தை குவித்து வருகின்றன. எதிர்வரும் வாரத்தில், சகல தமிழ் கட்சிகளும் கொழும்பில் ஒன்றுகூடி, “எதிர்கால ஒளி” எனும் தொனியில் சிந்திக்கவும் செயற்படவும் புறப்படத் தயாராகின்றன.

மலையக அரசியல் இதற்காக ஏற்கனவே தாயக அலுவலகத்தை ஆரம்பித்துவிட்டது. எனினும், முஸ்லிம் தலைமைகள் இன்னும் இதற்குத் தயாராக இல்லை. தலைமைகளின் பொருட்படுத்தாத் தனம், தனிப்பட்ட பழிவாங்கல்கள் இன்னும் குறுநிலப் போர்களால் ஒரு தேசமே திசைமாறும் துர்ப்பாக்கியம் ஏற்படுகிறது. நீதிமன்றம், நியாயந்தேடல், தண்டனை வழங்கல் என, உள்வீட்டுப் பிரச்சினைகளால் முஸ்லிம் தலைமைகள் விவாகரத்தில் நிற்கின்றன.

இது, மூன்றாம் தேசியத்தை முதுகெலும்பில்லாச் சமூகமாக மாற்றாதிருந்தால் சரிதான். உசுப்பேற்றும் இத்தலைமைகளின் வார்த்தைகளுக்காக, அறிந்தோ அல்லது அறியாமலோ இல்லை உணர்ச்சி வசப்பட்டோ முஸ்லிம்கள் இவர்களுக்கு வாக்களிப்பதுண்டு. இவர்களை முதுகெலும்பில்லாத, முகவரியில்லாத சமூகமாக மலினப்படுத்தாதிருந்தால் போதுமானது.

அவ்வாறு செய்தால், கறைபடிந்த வரலாற்றுப் புள்ளியாக இது பதியப்படும். வடக்கில் மீளக்குடியமர்தல், கிழக்கில் கையகப்படுத்தப்பட்ட காணிகள், இது தவிர தெற்கில் குறைக்கப்படும் கலாசாரப் பரம்பல், இவற்றுக்கு தீர்வு தரும் தேசிய தலைமையை, இம்முறையாவது முஸ்லிம் தலைமைகள் சரியாக நாடி பிடிப்பது அவசியம். இதன் மூலமே, ராஜபக்ஷக்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கான களத்தை உருவாக்க முடியும்.



**சீனப் பல்கலையுடனான... 3 ஆம் பக்க தொடர்ச்சி...**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எங்களின் நிலத்தை அபகரிக்கும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சிநிரலை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு துணிச்சலாக மறுத்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

ஐ.நா சபையின் அறிக்கையின் பிரகாரம், இனவழிப்பு யுத்தத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் சிறிலங்கா ஆயுத படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டனர். குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

சீனா, அனைத்தையும் நன்றாக அறிந்திருந்தும் தமிழர்களை தொடர்ந்து அவமானப் படுத்துவதையும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல் தடுப்பதையும் வழக்கமாக கொண்டதுடன், போர்க்குற்றவாளிகளை ஆதரித்தும் இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து அச்சுறுத்தியும் இலங்கையை கைப்பற்றும் அதன் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

தமிழர் விரோத மனப்பான்மை கொண்ட சீனா வடக்கிலும் கிழக்கிலும் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செல்லும் தீய நோக்கத்துடன் எமது கடலையும் நிலத்தையும் அபகரித்து எமது பாரம்பரிய மண்ணில் எம்மை அகதிகளாக்கி இனப் படுகொலை செய்யும் முயற்சிகளை நாம் ஏற்கனவே கண்டித்திருந்தோம்.

தீங்கு விளைவிக்கும் கடலட்டை பண்ணைகள் என்ற போர்வையில் சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்கனவே எமது கடலின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து, எமது மீனவர்களிடையே பிளவை உருவாக்கியுள்ளது.

தற்போது சீனா வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளமான விவசாய நிலங்களை, தமது நாட்டில் பத்து ஆண்டுகளில் ஏற்பட இருக்கும் மிக கடுமையான உணவு பஞ்சத்தை சமாளிக்கும் பொருட்டு தீய எண்ணத்துடன் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சீனா, இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்களுடன் கூடிய மலக் கழிவுகளை உரமாக வழங்கியதாகவும், இலங்கைக்கு மில்லியன் கணக்கான ரூபாய்களை செலுத்துமாறு நிர்ப்பந்தித்ததாகவும் கூறப்படுகிறது. சீனாவில் வரவிருக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க எமது வளமான விவசாய நிலங்களை சீனா எப்படி கைப்பற்றி எம்மை அடிமையாக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் சாத்தியமற்ற சீனக் கடன்கள் மூலம் இலங்கை தற்போதைய நிலைமைக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கு ஜப்பானும், இந்தியாவும் ஆதரவளித்துள்ள போதிலும், கடன்களை பரிசீலிக்கும் தற்போதைய பேச்சு வார்த்தைகளில் கூட சீனாவின் மறுநிதியளிப்பு திட்டத்தில் தொடர்ந்து இருந்து வருவது, இலங்கையில் மீண்டும் பேரழிவை ஏற்படுத்தும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரல் இலங்கையின் சமீபத்திய வரலாற்றிலிருந்து தெளிவாகக் அறிய முடிகிறது.

சீனாவின் அணுகுமுறையின் அடிப்படையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். எமது நிலங்களையும் கடலையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்க பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், அண்மையில் சீன பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட இருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்த துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடலையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன், நமது கடலையும், நிலத்தையும் காப்பாற்ற குரல் கொடுக்குமாறு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்த கடமையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், எதிர்காலத்தில் நாம் அனைவரும் எம்முடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவோம். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தட்டிக்கழிக்கப்பட.. 3 ஆம் பக்க தொடர்ச்சி...**

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 80 களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிறைவடைந்த யுத்தம் என்பது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழிமுறைக்கு கிடைத்த தோல்வியாகவே அனைவரும் கருத வேண்டுமே தவிர, தமிழ் மக்கள் தோல்வியுற்ற சம்பவமாக அதனை யாரும் கருதக்கூடாது.

தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்ற சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக, தமிழ் மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டினை தற்போதைய ஜனாதிபதி தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது” எனவும் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட அபிவிரு.. 3 ஆம் பக்க தொடர்ச்சி...**

மீண்டும் அதனை அமல்படுத்துவதற்கு இந்த ஜனாதிபதி முயற்சி செய்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட ஏனைய தமிழ் கட்சிகளும் அதனை எதிர்க்கும்” என அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான, டக்ளஸ் தேவானந்தாவும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

“தமிழர்கள் இன்னும் தோற்றுப் போய்விடவில்லை. நிராகரிக்கப்பட்ட ஒரு சபையை மீண்டும் கொண்டுவர முயற்சிப்பதை எமது மக்கள் ஏற்க மாட்டார்கள்” என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீதரன் உட்பட முக்கிய தலைவர்கள் இதில் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

“பாராளுமன்றத்தில் நடைபெறும் வரவு செலவு திட்ட வாக்கெடுப்பின் பின்னர், அனைத்து கட்சிகளையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த நிலையில், மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்பதை எந்த வகையிலும் ஏற்க முடியாது. அவ்வாறு மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் அவர் அடம்பிடிப்பாராக இருந்தால், அந்த மாநாட்டில் கலந்து கொள்வதை புறக்கணிப்போம்” என்று தமிழ் கூட்டமைப்பில் உள்ள கட்சி ஒன்றின் தலைவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், மாவட்டஅபிவிருத்திசபைகள் தொடர்பாகவோ, மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்குவது தொடர்பாகவோ ஜனாதிபதி எதுவும் பேசவில்லை. ஊடகங்களில் பலியான செய்தி உண்மைக்கு புறம்பானது என ஜனாதிபதியின் அலுவலகம் அறிவித்துள்ளது.

# ஐக்கிய அரபு இராச்சியம், ஓமானில் நிர்க்கதியாகி இருக்கும் 77 இலங்கையர்களை அழைத்து வர விசேட ஏற்பாடு

சுற்றுலா விசாவில் சென்று ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் நிர்க்கதியாக இருக்கும் 77 இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக குற்றப்புலனாய்வுத்திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுக்கள் அந்தந்த நாடுகளுக்கு செல்ல உள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப்பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

மேற்படி நாடுகளில் சுற்றுலா விசாவில் தொழிலுக்காக சென்ற பெண்கள், தொழில் வாய்ப்புகள் பெற முடியாமல், நெற்கதியான நிலையில் தூதரகங்களிலும் ஒவ்வொரு இடங்களிலும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களில் பலர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படடதாகவும் சிலர் பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகிய நிலையில், இலங்கை தூதரகத்தில் பணியாற்றிய ஒரு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தூதரகத்தில் தஞ்சம் அடைந்திருந்த இலங்கை பெண்களை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

**முட்டை விலை.. 3 ஆம் பக்க தொடர்ச்சி...**

எவ்வாறாயினும், இது தொடர்பில் நாம் வினவியபோது, கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள பின்னணியில் இவ்வாறான விலை அதிகரிப்பு இடம்பெற முடியாது என வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் தட்டுப்பாடு இன்றி முட்டைகளை விநியோகிக்க முடியும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# வன்முறையில் வீடுகளை இழந்த 76 எம்.பிகளுக்கு வாடகை வீடுகள்!

நாட்டில் கடந்த மே மாதம் முதல் ஏற்பட்ட அமைதியின்மையால் வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்த 76 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கலல்கொடவில் உள்ள வியத்புர வீடமைப்புத் திட்டத்தில் அவர்களுக்கான வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வீடுகள் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்டதாகவும் அதில் வசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மாத வாடகை வசூலிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வளாகத்தில் 106 வீடுகள் உள்ளதாகவும் வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவைப் பட்டால், அந்த வீடுகளில் வசிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வீடுகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாங்கலாம் என்றும் அவர்களது நிரந்தர வசிப்பிடமாக அதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

## கொழும்பில் அரசுக்கு எதிராக பெண்கள் ஆர்ப்பாட்டம்;

# பாராளுமன்றை நோக்கி பேரணி

கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்ட நிலையில் அங்கு வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாருடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்திற்கு செல்லும் பிரதான வீதிக்கு அருகில் பத்தரமுல்ல வழியில் தற்போது குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லும் வீதியில் நுழையா வண்ணம் அப்பகுதியில் பெருந்திரளான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# எல்லை நிர்ணயத்தின்படி உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட வேண்டும்

அரசாங்கத் தேவைகளுக்காக வகுக்கப்பட்ட நிர்வாக எல்லைகளுக்கு மத, இனவாதச் சாயங்கள் பூசுவதை நிறுத்த வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ. எல். எம். அதாஉல்லா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இன வீதாசாரத்துக்கு ஏற்ப காணிகளைப் பங்கிடாது உள்ளூராட்சி சபைகளைப் பிரித்ததால், இனங்களுக்கிடையில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதையும் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாஉல்லா தெரிவித்ததாவது,

சிறிய கட்சியின் தலைவராகச் செயற்பட்டு, நாட்டின் உச்ச பதவியில் அமர்ந்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவை வாழ்த்துகிறேன். கடந்த காலங்களில் அவரோடு இணைந்து மிக முக்கியமான அரசியல் தீர்மானங்களை நாங்கள் எடுத்திருந்தோம். இவ்வறான ஒரு முதிர்ச்சி மிக்க தலைவர் அமர்ந்துள்ள இச்சபையில், சில விடயங்களை கவனத்துக்கு கொண்டு வருவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

கிராமிய மக்களின் சுகாதாரம், அபிவிருத்தி, இன்னும் உள்ளூர் இறைமைகளைப் பாதுகாக்கவென நூறாண்டுகளுக்கு முன்னரே கிராமிய சபைகள், பட்டின சபைகள் உருவாக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அக்கரைப்பற்று, வெவகம் பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகுப் பற்று மற்றும் பாணமைப்பற்று என்பவை இதில் பிரதானமாவை.

இந்தச் சபைகள் 1987 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில், ரணசிங்க பிரேமதாஸவால் சில இணைக்கப்பட்டும் சில சபைகள் பிரிக்கப்பட்டும் உள்ளூராட்சி சபைகளாக அறிமுகஞ் செய்யப்பட்டன.

அக்கரைப்பற்றிலிருந்து வடக்கைப் பிரித்து அட்டாளைச்சேனைக்கும் தெற்கை திருக்கோயிலுக்கும் மத்தியை அக்கரைப்பற்றுக்கும் பிரித்துக் கொடுத்தனர்.

பாணமைப்பற்றை, லௌகலை மற்றும் பொத்துவில் எனப் பிரித்தனர். சம்மாந்துறைப்பற்று எதுவும் செய்யப்படாமல் அவ்வாறே இருந்தது.

ஆனால், கரவாகுப்பற்றில் DR ஒரே பிரிவிலிருந்த கரவாகுப்பற்றுத் தெற்கு சாய்ந்தமருதையும், கரவாகுப்பற்று வடக்கு மருதமுனையையும் கரவாகுப்பற்று மேற்கு தமிழர் பகுதியையும் கல்முனை பிதேச சபையின் கீழ் கொண்டு வந்தனர்.

நூறு வருடங்களாக தனியாக இயங்கிய இச்சபைகள் ஒரு நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டதால், இம்மக்கள் தங்களது சுயத்தை இழந்தனர். இந்த உள்ளூராட்சி சபைகளை அன்றைய ஆட்சியாளர்கள் முறையின்றிப் பிரித்ததாலே இன்று, நமது சமூகங்களுக்கிடையில் விரிசல்கள் எழுந்துள்ளன. இதை விடவும், தங்களது தேவைகளுக்காக சில அரசியல்வாதிகள் இந்த சர்ச்சைகளுக்கு வேறு சாயங்களைப் பூசிப் பூதாகரமாக்குகின்றனர்.

நூறாண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப் போன்று, கல்முன கரவாகுப்பற்று பிரதேசத்தை நான்கு சபைகளாகப் பிரித்தால்தான், இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். 1897 ஆம் ஆண்டே, சாய்ந்தமருது தனியான சபையாக இயங்கியது.

இங்கு எல்லைப் பிரச்சினைகள் இருப்பதாக சில அரசியல்வாதிகள் கூறுவதை ஏற்க முடியாது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் கடந்த 2020 இல், அலரிமாளிகையில் ஒரு முக்கிய கூட்டம் கூட்டப்பட்டது. அதில், நானும் கலந்துகொண்டேன்.



## சாய்ந்தமருது, கல்முனை வடக்கிற்கும் சபைகள் வேண்டும்

கல்முனையின் வட பகுதியைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், நீதிமன்ற வழக்கைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. எனவே, எல்லை நிர்ணய அறிக்கை கிடைத்ததும் கல்முனை வடக்கு விவகாரமும் தீர்க்கப்படுவதே நியாயமான பங்கீடாக இருக்கும்.

மேலும், சாயந்தமருதுக்கு 2022 பெப்ரவரியிலிருந்து தனியான உள்ளூராட்சி சபை பிரகடனம் செய்யப்பட்டு வர்த்தமானியும் அன்று வெளியிடப்பட்டிருந்தது. பின்னர், ஏதோவொரு காரணத்துக்காக அதுவும் நிறுத்தப்பட்டது.

அரச கருமங்களை, இலகுவாக்கவே நிர்வாக எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன. இவ்வாறு பிரிக்கப்படும் சபைகளை தமிழ்ச் சபையென்றோ, முஸ்லிம் சபையென்றோ அல்லது சிங்கள சபையென்றோ சாயம்பூச முடியாது.

திருக்கோயில் பிரதேச சபைக்குள் உள்ள வட்ட மடுவில் முஸ்லிம்களுக்கு காணிகள் இல்லை எனக் கூறப்படுகிறது. மூதாதையர்கள் வெட்டிய காடுகளுக்கு 1984 இல் வழங்கப்பட்ட 'பேர்மிற்'களையும் சில அதிகாரிகள் திட்டமிட்டு அழித்துள்ளனர்.

இவ்வாறு, பொத்துவில், லௌகலைபிரதேச சபைகளிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடத்தில் காணித் தகராறுகள் ஏற்பட்டுள்ளன. DR டிவிசன், DS டிவிசன் மற்றும் AGA டிவிசன்கள் எல்லாம் அரச நிர்வாகத்தின் அடையாள எல்லைகளேதவிர, இன அல்லது மதப் பிரிவுக்கான தனித்துவ அடையாளங்கள் இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாஉல்லா தெரிவித்தார்.

இதையடுத்து, தேசிய காங்கிரஸ் தலைவரின் கருத்துக்களை கவனமாகச் செவிமடுத்ததாகத் தெரிவித்த பிரதமர், தினேஷ் குணவர்த்தன இவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# காலநிலை மாற்றம்: உலகத் தலைவர்களை குற்றம் சாட்டும் ஜனாதிபதி

காலநிலை மாற்றத்திற்கு பயனுள்ள தீர்வுகளை வழங்கக்கூடிய நாடுகள், நேரடியாக தலையிடாவிட்டால் மனித குலத்தின் எதிர்கால இருப்பை அச்சுறுத்தும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

COP27 மாநாட்டின்வெற்றிக்குமிகப்பெரும் தடையாக இருப்பது அரசியல் மயப்படுத்தலும், காலதாமதமும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

COP27 உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிக்கை :

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மனிதன் – காலநிலை மாற்றம் எனும் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக உலகத் தலைவர்கள் கடந்த 27 ஆண்டுகளாக கொப் கட்டமைப்பின் கீழ் கூடிவருகின்றனர். எனினும், கொப் செயன்முறையின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய உலகளாவிய மற்றும் கூட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் இன்னும் தயாராக இல்லை.

கொப் 27 இல் எட்டப்பட்ட முடிவுகள் துன்பத்திலிருந்து நாடுகளை விடுவித்து ஒரு முற்போக்கான நிலையில் வைக்க மீண்டும் தவறிவிட்டன. அரசியல்மயமாக்கல் மற்றும் காலதாமதம் ஆகியனவே வெற்றிக்கு மிகப் பெரிய தடையாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

உச்சிமாநாட்டின் இறுதி முடிவு ஊக்கத்தை இழப்பதாக அமைந்த மிகப் பெரிய சேதத்திற்கு வரலாற்று ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய நாடுகள் மற்றும் அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்கக்கூடிய நாட்டு தலைமைகள் சமூகமளிக்காமையானது காலநிலை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கிறது. உலகிலுள்ள தெற்கு நாடுகள் இழப்பு மற்றும் சேதத்துக்காக பகுதி அளவில் வழங்கப்பட்ட நிதியுடன் போராடிய போதும், கடந்த ஆண்டுகளில் G77 நாடுகளின் ஒருமித்த நிலைப்பாடு மற்றும் அழுத்தம் காரணமாக பாரியளவில் சாதித்துள்ளன.

இழப்பு மற்றும் சேதங்கள் நிதி சரியான பாதையில் செல்கின்றபோதும், தேவையான நிதி பங்களிப்புகளை செய்வதற்கு பொறுப்பான நாடுகளை அடையாளம் காண்பதில் ஒரு முக்கியமானபுறக்கணிப்பு உள்ளது. பொறுப்புக் கூறுதல் மற்றும் இழப்பீடுகள் பற்றிய சரத்துக்களை கொண்டதான நிதியை ஸ்தாபிப்பது பற்றிய எவ்வித குறிப்புகளும் இதில் உள்ளடக்கப்படவில்லை. இதன்விளைவாக இதில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து இழப்பு மற்றும் சேதங்கள் நிதி, வினைத்திறனுடன் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் G77 நாடுகள் தொடர்ந்தும் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், இந்த நிதி கடந்தகால நிகழ்வுகளுக்கானது - இது ஏற்பட்ட சேதங்களுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கும். இது காலநிலை மாற்றத்திற்கான மூல காரணங்கள் குறித்து கவனம் செலுத்த மாட்டாது. எனவே தற்போது இடம்பெற்றுவரும் பேரழிவுகளை வரும் முன்னரே தடுப்பதற்காக, 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி எனும் இலக்கை அடைவதனை கருத்திற்கொண்டு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

உலகம் முன்பு கணித்ததை விட வேகமாக முன்னேறி வருகிறது. எனவே, காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் முயற்சிகள் மேலும் தேக்க நிலையில் இருக்க முடியாது. உலக வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் உயரக் கூடாது என்று கடந்த ஆண்டு உலகமே ஒருமனதாக தீர்மானித்தது. அதற்கான அசல் இலக்கு நடைமுறைப்படுத்தப்படாத போதும் அதனை செயற்படுத்த வேண்டிய விதம் குறித்து கொப் 27 இல் சமரசம் செய்யப்பட்டது.

காலநிலை மாற்றத்திற்கான உலகளாவிய செயல்திட்டங்களை வலுப்படுத்துவதற்கான ஒரு வருட பணிக்கான ஒப்புதல் முத்திரையாக இது இருக்க வேண்டும் –ஆற்றல் துறைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கும் ஆரம்பமாக வேண்டும்.

மாநாட்டில் பங்கெடுக்கும் தரப்பினருடன் தொடர்புடைய வகையில் கொப் 28 இல் நிலைபேண்தகு முன்னேற்றம் காணப்பட வேண்டும். இல்லையென்றால் கொப்பினை கலைப்பதே சிறந்தது.

# தெவிநுவர கல்வீடு

## தமிழர் கட்டிடக்கலையின் மற்றோரு எச்சம்



**சரித்திரப் பார்வை**

**சஞ்சீவி சிவகுமார்**



இலங்கையின் தென் எல்லையான தேவேந்திரமுனைக்கு அருகாக, தெந்துர நகரத்திற்கு அருகில், தெவிநுவரவில் 'கல்வீடு' என அழைக்கப்படும் கட்டிடம் காணப்படுகின்றது. தொல்லியல் ரீதியில் சரியாக விபரம் அறியப்படாத பண்டைய ஆட்சிக்காலத்திற்குரிய கட்டிடமாக இது குறிப்பிடப்படுகின்றது.

கருங்கற்களான தனித்த கட்டிடமாகக் காணப்படும் இக்கட்டிடம் உள்ளூர்வாசிகளால் "ஹல்கே" என அழைக்கப்படுகின்றது. நீள்சதுர வடிவில் அமைந்த இக்கட்டிடத்தின் நீளம் 26 அடிகளை விடச் சற்று அதிகமாகும். அதன் முன்புறத்தில் மட்டும் சிறிய கதவினைக் கொண்ட இக்கட்டிடத்திற்கு யன்னல்களோ அல்லது வேறு கதவுகளோ இல்லை.

1914ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரியான E. R. ஐர்டோன் இக்கட்டிடத்தை முதன் முதலில் அடையாளப்படுத்தினார். 1927 இல் ஆங்கிலேய அரசால் இது தொல்லியல் திணைக்களத் திற்குரியதாக ஆவணப்படுத்தப்பட்டது.

இக்கட்டிடம் கூடம் ஒன்றின் அமைப்பை கொண்ட ஒற்றைப்படைக் கட்டிடமாக இருந்த போதிலும் இதன் பின்பகுதி கருப்பக்கிரகத்திற்குரியது போன்ற ஒடுங்கிய அமைப்பைக் கொண்டது. ஆயினும், இதில் காணப்பட்டிருக்கக்கூடிய சிலை அல்லது சொரூபம் குறித்தோ வணக்கமுறை குறித்தோ எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் வெளிவந்த *Ceylon Travellers Handbook* இந்தக் கட்டிடத்தின் சுவர்கள் இரு புறமும் ஒப்பமாகச் செதுக்கப்பட்ட கருங்கற்களால் அமைக்கப்பட்டிருப்பதுடன் அக்கற்கள் ஒன்றுடனொன்று மிக நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளமை பற்றி வியந்து கூறியுள்ளது.

பேராசிரியர் பரணவிதான இதனை 7ஆம் நூற்றாண்டுக்குரிய 'உபுல்வன்' எனும் தெய்வத்துக்குரிய கோயிலாகக் கூறுவார். உபுல்வன் என்பது சமஷ்கிருதத்தில் "உற்பலவர்ணன்" என அழைக்கப்படுகின்ற விஷ்ணுவின் ஒரு மூர்த்தமாகும். மகாஜன பௌத்த வணக்கமுறைகளில் தேவாலயங்களில் உபுல்வன் காவல் தெய்வமாக வைக்கப்படுகின்றார். பேராசிரியர் பரணவிதான இதனை பௌத்த சார்புடைய கட்டிடமாகக் காட்ட இதன் மூலம் முற்பட்டிருக்கலாம்.



ஆனால் மற்றைய ஆய்வாளர்கள் பலரும் இதனை பொலன்னறுவைக் காலத்துக்குரிய கட்டிட அமைப்பாகக் காட்டுகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் மேல் விமானம் அமைந்திருந்தால் இக்கட்டிடத்தை பொலன்னறுவைச் சிவன் கோயில் என்றே கூறமுடியும். அந்த அளவுக்கு சோழர் காலத்துக்குரிய பொலன்னறுவைச் சிவன் கோயிலின் கட்டிட அமைப்பை இது முழுமையாக ஒத்துக் காணப்படுவது கவனிக்க வேண்டியதாகும். சோழர்களின் ஆட்சி தெற்குவரை வியாபித்திருந்தமையையும் இங்கு ஞாபகப்படுத்தலாம்.

தமிழர்களின் கட்டிடக்கலையின் தனித்துவத்தையும் ஆட்சி அதிகார வியாபகத்தையும் காட்டும் "தெவிநுவர கல்வீடு" உரிய கவனிப்பையும் முக்கியத்தையும் பெறச் செய்வது தமிழ் ஆர்வலர்களின் கடமை ஆகும்.

# போதைப் பொருள்

## உருவாகும் இழி நிலையும், நடத்தை பிறழ்வுகளும்

✍ கௌ. சி.

இது இங்குதான் வந்து முடியும் என்பது முன்னமே தெரிந்த விடயம்தான். மாணவர்களிடையேயான போதைப் பொருள் பாவனை குறித்து இணையத்தில் தேடினாலே போதும், ஓராயிரம் தகவல்கள் கொட்டிக்கிடக்கின்றன. எல்லோருக்கும் அதன் ஆதி அந்தமும் தெரிந்துவிடும்.

உலக போதைப் பொருள் வியாபார விஸ்தீரணத்தினாலும், அதன் தொடர்ச்சியாக வர்த்தக நோக்கம் கொண்ட பாலியல் விகாரங்களை தூண்டும் உற்பத்திகளினாலும் மானுட வாழ்வியலின் இறைமை மிகப்பெரும் சவாலுக்குள்ளாகி, அதை இன்று உலகம் தரிசிப்பது போல், நாமும் ஒரு நாள் தரிசிக்க நேரும் என்பது தெரிந்திருந்ததே.



எனினும், இன்றைய செய்தி ஒன்று ஒரு கணம் நம்மை உறைய வைக்கிறது. பாடசாலை வளாகம் ஒன்றில் சக மாணவனால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட இன்னொரு மாணவனின் செய்தி மிக கனம் பொருந்தியது.

போதை பொருட்களின் உச்சம் பாலியல் துஷ்பிரயோகம், இதுவே இன்று உலகம் இயங்கும் ஒரு இருண்ட மறு யுகம். இதை நோக்கியே நம் இளைய தலைமுறை தள்ளப்படுகிறது. இதை நான் சொல்வதொன்றும் புதிய கண்டுபிடிப்பல்ல. எத்தனையோ ஆய்வுகள் நம் கண் முன்னே பரந்து கிடக்கின்றன.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே போதைப் பழக்கத்தின் பரவலான மதிப்பீடுகள் மற்றும் வன்முறையுடனான அதன் தொடர்பு மற்றும் பள்ளி நடத்தைகள் தொடர்பான ஒரு குறுக்கு வெட்டு ஆய்வினை (Cross & Sectional study) ஜோர்டானில் நடத்தியிருந்தார்கள். National Library of Medicine எனும் இணைய தளத்தில் அதன் ஆய்வு முடிவுகள் 2021ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஆய்வு வடிவமைப்பானது வினாக்கொத்து மற்றும். பங்கேற்பாளரிடமிருந்து ஒரு சிறுநீர் மாதிரி பரிசோதனை மற்றும் மல்டி-ட்ரக் ரேபிட் டெஸ்ட் கோப்பை மூலம் பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

440 மாணவர்களில், மொத்தம் 414 பேர் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டனர். சிறுநீர் மாதிரி மூலம் நேர்மறையான போதைப்பொருள் பயன்பாடு ஆய்வின்போது 70 மாணவர்களில் (16.9%) உறுதிப்படுத்தப்பட்டது, அவர்களில் 80% மானோர் ஆண் பிள்ளைகள். 20% மானோர் பெண் பிள்ளைகள் .ஆசிரியர்களுக்கு மரியாதை கொடாத மாணவர்கள் போதைக்கு அடிமையான மாணவர்கள் குழுவில் கணிசமான அளவில் கூடுதலாக இருந்தனர்.

National Library of Medicine இனது பிறிதொரு ஆய்வு போதைப்பொருள் பாவனைக்கு பாலியல் துஷ்பிரயோதுடன் கணிசமான தொடர்பிருப்பதை உறுதிப் படுத்துகிறது. 81% பெண்பிள்ளைகளும் 69% ஆண் பிள்ளைகளும் முறையே 13 மற்றும் 11 வயதுடைய சராசரி வயதில் பாலியல் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டதாக தெரிவிக்கின்றனர்.

எனவே,இன்றைய திகதியில் இதற்கான மாற்று வடிவத்தை காணுவதும், இவ் இழிநிலையை எதிர்ப்பது என்பதும் மிகத்துணிவு சார் மற்றும், ஆய்வுகளின் அடிப்படையில் காரணிகளை கண்டறிந்து தீர்வுகளை முன்னிறுத்தக்கூடிய ஆளுமைகளை வேண்டி நிற்கும் ஒரு செயல்முறையாகும் .

நாம் எப்படி ஒரு ஆரோக்கியமான சமூகமாய் வளர்க்கப்பட்டோமோ அல்லது மறு வளமாக சொன்னால், நாம் அடிப்படை ஒழுக்கத்தோடேனும் வளர வேண்டும் என நம்மை சூழ இருந்த அனைவரும் நினைத்து செயல்பட்டதை போல் நாம் ஏன் இருக்க முயல்வதில்லை?

பாடசாலை என்பது ஒழுக்கத்தின் கூடாரம். நம் பிள்ளைகள் சமூக பண்புகளையும், ஒழுக்கத்தையும், தான் சார்ந்து வாழும் சமூகத்தின் பெறுமதிகளையும் அங்குதான் கற்றுணர முடியும். அந்த சூழமைவுகளை இழக்காது காத்தல் நம் அனைவரின் பொறுப்பும், இருத்தலின் அவசியமுமாகும்.



# திருகோணமலை பஸ் நிலையத்தின் அவலம்:

## கண்டும் காணாமல் இருக்கும் நகரசபை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பிரதான பேருந்து நிலையத்தில் பல குறைபாடுகள் சீர்செய்யப்படாமல் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

சுற்றுலா பிரயாணிகள் அதிகளவில் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருகின்ற நிலையில் திருகோணமலை நகருக்கு வராத சுற்றுலாப் பயணிகள் எவரும் கிடையாது.

அனைத்து இன மக்களும் வழிபடக் கூடிய ஆலயமாக கோனேஸ்வரா இந்து ஆலயம் அமைந்துள்ளது. இதேநேரம் மான்கள் மற்றும் மயில்கள் சுற்றித் திரியும் இடமாகவும் திருகோணமலை காணப்படுகின்றது.




அதேபோல, கன்னியாவில் காணப்படுகின்ற வெண்ணீரூற்று, நிலாவெளி பகுதியில் அமைந்துள்ள புறாத்தீவு அதேபோல் கிண்ணியாவில் கடல் மார்க்கமாக மிக நீளமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 'கிண்ணியா பாலம்' போன்ற அனைத்து இடங்களும் திருகோணமலையிலேயே அமைந்துள்ளது.

வெளிநாட்டவர்கள் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வருகின்றபோது திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத்திலேயே ஓரிரு மணித்தியாலங்கள் தரித்து நின்று செல்கின்றனர்.

இவ்வாறான நிலையில் திருகோணமலை நகரமும், திருகோணமலை பிரதான பேருந்து நிலையமும், சுற்றுலா பயணிகளுக்கு கவர்ச்சியை கொடுக்கக் கூடிய இடமாக இருக்க வேண்டுமே தவிர அசுத்தமான இடமாக இருக்கக் கூடாது என்பதையே சுட்டிக்காட்டுகின்றனர்.

உள்நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் விமர்சிக்க கூடிய வகையில் திருகோணமலை பேருந்து நிலையம் காணப்படுவதுடன் கட்டிடங்கள் உடைந்த நிலையிலும், வயர்கள் தொங்கிய நிலையிலும் விளம்பரப் பலகைகள் அங்கும் இங்கும் தொங்கவிட்ட நிலையில் காணப்படுவதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இதேநேரம் நாட்டில் பொருளாதார சீர்குலைந்த நிலையில் காணப்படும் பட்சத்தில் வெளிநாட்டவர்களை கவரும் விதத்தில் கிழக்கு மாகாணத்திலும் அதிலும் திருகோண மலையை மிகவும் சுத்தமான இடமாகவும், கவர்ச்சியான ஒரு இடமாகவும் மாற்ற வேண்டிய பொறுப்பு திருகோணமலை நகர சபைக்கு உரித்தான விடயமாகும்.

திருகோணமலை பிரதான பேருந்து நிலையத்தில் 'சுத்தமான குடிநீர்' என பதாகை இடப்பட்ட நீர்த் தாங்கியொன்று காணப்படுகின்றது.

அங்கு காணப்படுகின்ற நீர் தாங்கிக்கு சுத்தமான குடிநீர் சேமித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நீர்தாங்கியிலிருந்து பேருந்து நிலையத்தில் காணப்படுகின்ற அனைத்து கடை உரிமையாளர்களும் நீர் தாங்கியிலிருந்து சுத்தமான குடிநீரை பெற்று தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

இந்நிலையில், பொதுமக்கள் பாவனைக்காக வைக்கப்பட்டிருக்கின்ற 'சுத்தமான குடிநீர்' தாங்கியில் நாய்கள் மற்றும் மான்கள் அதேநேரம் பேருந்து நிலையத்தில் தங்கியிருக்கும் யாசகர்கள் அந்த நீரை இரவு நேரங்களில் குளிப்பதற்கும் பாவித்து வருவதாகவும் இதனால் நோய்கள் பரவக்கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## உல்லாச பயணிகளின் சொர்க்காபுரியை கவனிப்பது யார்?

அதேநேரம் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசல கூடங்கள் அசுத்தமான நிலையில் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

திருகோணமலை நகர சபை பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடத்தை வாடைகக்கு வழங்கி ஒரு நாளைக்கு 800 ரூபாய் பணத்தை அறவிட்டு வருவதாகவும் குறித்த விடயத்துக்கு பொறுப்பானவர் தெரிவித்தார்.

ஆனாலும் அந்த மலசல கூடம் மக்களுக்கு பாவிக்க முடியாத நிலையில் உள்ளதுடன் அதனை நிர்மாணித்து கொடுப்பதற்குரிய எவ்வித நடவடிக்கையினை எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும், மலசல கூடத்தில் இருந்து வெளியாகும் அசுத்தமான நீர் மக்கள் நடமாடும் இடத்தில் தேங்கி நிற்பதுடன், நுளம்புகள் பெருகக் கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை நகர சபையினால் வரிகள் அறவிடப்பட்டு வருவதுடன் கடைகளில் வாடகை பணங்கள் அதிகளவில் அறவிடப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் திருகோணமலை நகரத்தை அழகுப்படுத்தும் நடவடிக்கையில் நகர சபை ஈடுபட வேண்டும் என்பதையே மக்கள் சுட்டிக் காடுகின்றனர்.

பொருளாதாரம் சீர்குலைந்து காணப்படுகின்ற நிலையில் வெளிநாட்டவர்களின் வருகையை அதிகரிப்பதற்கு திருகோணமலை நகரையும் திருகோணமலை பிரதான பேருந்து நிலையத்தையும் அழகு படுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்பதுடன் சுகாதார நிலையத்தில் மிகவும் அக்கறையாக செயல்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக திருகோணமலை நகர சபையின் தவிசாளரை பல தடவைகள் தொடர்பு கொண்ட போதிலும் பயனளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.



இளம் கலைஞர் அறிமுகம்

அறிமுகம்

# வடிவமைப்பாளராக திரைத்துறையில் கால் பதித்த மதுஷ்



அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தை கிராமத்தை சேர்ந்தவர் தனேந்திரன் மதுசன் இவருடைய அப்பா ஒரு சாரதி அம்மா சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரிகிறார். தனது ஆரம்பக் கல்வியை மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி உயர் தர பாடசாலை கல்முனை மற்றும் மத்திய மகா வித்தியாலயம் சம்மாந்துறை ஆகியவற்றில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் தொடர்ந்தார்.

இவருக்கு சாதாரண தரம் படிக்கும் போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பில் ஆர்வம் வந்துது. சாதாரண தரப் பரீட்சை எழுதிய பின்னர் விடுமுறையில் *Youtube* காணொளிகள் மூலமாக வடிவமைப்பு தொடர்பான தேடல்கள் தொடர்ந்தது. பின்னர் உயர் தரம் படிக்கும் போது பொழுதுபோக்காக சில வடிவமைப்புகள் செய்து அவற்றின் மூலம் இலாபமீட்ட ஆரம்பித்தார். அதற்காக 2018இல் *Alpha Creations* என்ற பெயரில் முகநூல் பக்கம் ஒன்றினை ஆர்ப்பரித்து அதன் மூலம் ஓடர்களை பெற்றுக் கொண்டார். 2019 இல் உயர்தர பரீட்சை எழுதி முடிந்தவுடன் இன்னும் பல விடயங்களை தேடிக்கற்றுக்கொண்டு,

*Alpha Creations* என்ற பெயரை *Graphixfy* என்று பெயர் மாற்றம் செய்து பதியப்பட்டு அனிமேசன் வேலைகளையும் ஓடர்களாக பெற்று இலாபமீட்ட ஆரம்பித்தார்.

2021 வரை வருமானம் கிடைத்த போதிலும் இவர் பெரிதும் அறியப்படாத ஒருவராக இருந்தார். தமிழகரன் சனாவின் மூலம் ''புட்டுப் பாட்டு'' உச்சத்தில் இருந்த போது அதன் தயாரிப்பு நிறுவனமான வெற்றி விநாயகரோடு கைகோர்த்து ''உங்களில் ஒருவன்'', ''நாலு பேருக்கு நன்றி'' எனும் இரண்டு பாடல்கள் செய்யும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. அதன் மூலம் திசோன், அட்விக், வாகீசன், ரெஜி செல்வராசா ஆகிய முன்னனி கலைஞர்களோடு சில சில வேலைகள் தொடர்ச்சியாக செய்ததன் பிற்பாடு கீச்ணீ இனுதூடுணிண எனும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு அதில் எடிட்டர் மற்றும் வடிவமைப்பளாராக இணைந்து பணியாற்றினார். அதன் பாடல்கள் அனைத்தும் பெரும் வரவேற்பை பெற்றதை அடுத்து அதன் மூலம் பல ஓடர்கள் வர ஆரம்பித்தது.

மதுஷ் இலங்கை தாண்டி இந்தியாவின் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான சூப்பர் சிங்கர் புகழ் மானசி, முத்துசிற்பி மற்றும் பாடகர் பிரதீப் குமார் ஆகியோரின் பாடல்களில் வேலை செய்யும் வாய்ப்பினையும் பெற்றார். தனது வடிவமைப்பு திறன் மற்றும் கலைஞர்களோடு பழகும் விதத்தினால் பாடல்களை தாண்டி திரைப்படம் என்ற அடிப்படையில் மலேசிய திரையரங்குகளில் பிரம்மாண்டமான முறையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் வெளியாக இருக்கும் தீயவன் திரைப்படத்தில் எடிட்டர் மற்றும் வடிவமைப்பாளராக பணியாற்றி முடித்துள்ளார். *RapCeylon*, கனடா தமிழ் பசங்க, ஜேர்மனின்தமிழ் திரைப்படங்களை வெளியிடும் *GETAM South Indian Movie Distubutor , UK Film Factory, Australia SYD Production* போன்ற நிறுவனங்களுக்கு *Digital Marketing Manager* - வடிவமைப்பாளராக பணி புரிந்து வருகின்றார். இதுவரை அனைத்து புகழ்பெற்ற நாடுகளில் இருந்தும் இவருக்கு ஓடர்கள் கிடைத்துள்ளன.

இதைவிட எம் பிரதேசத்தில் உள்ள முக்கிய பல விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கான வடிவமைப்புக்களை தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு மேலாக செய்து வருகிறார். குறிப்பாக மாதம் ஒன்றிற்கு 5 பாடல்களுக்கு மேல் வடிவமைப்பு வேலைகளில் பங்காற்றி வருகிறார். குவியம் விருதுகள் 2022 இல் *Talent Of the Year* மற்றும் வடிவமைப்பு வேலைகளுக்கான விருதுகளையும் இவர் பெற்றுக்கொண்டார்.

இத்துறையில் இவருக்கு மிகப்பெரும் உதவியாக இருக்கும் தனது பெற்றோர், சகோதரங்கள், நண்பர்கள், யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்லாது தனது நண்பர்களுக்கும் இவரை அறிமுகப்படுத்தி பரிந்துரை செய்யும் திசோன் விஜயமோகன், சிந்துசன், தேனுசன், ராஜீ காந்தன், கண்ணா மற்றும் தமிழகரன் சனா அனைவருக்கும் தான் மிகவும் கடமை பட்டுள்ளதாக மனம் திறக்கிறார். எதிர்காலத்தில் தன் பெயர் சொல்லும் பெரிய நிறுவனமாக இதனை வளர்த்து ஊடக மற்றும் திரைத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு நகரும் மதுசனின் இலட்சியம் கைகூட எமது வாழ்த்துகள்.







# விளைந்தும் விற்க முடியாத நிலை... மட்டு நெல் விவசாயிகள் அவலம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தற்போது நமது நாடு எதிர்கொண்டுள்ள வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவு மட்டக்களப்பு விவசாயிகளையும் வாட்டி வதைக்கிறது.

நாட்டில் முகம்கொடுக்கும் எரிபொருள் மின்சாரம் சமையல் எரிவாயு பால்மா உணவுத் தானியங்கள் என்பனவற்றிற்கான தட்டுப்பாடு விலையேற்றம் போன்றவற்றைச் சமாளிக்க இனி வேறு வழியே இல்லை என்ற நிலையில் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மனிதனுக்கு மிகவும் அவசியம்.

அதேவேளை உண்ண உணவில்லாத நிலையில் மற்றைய உடையும் உறையுளும் ஆடம்பரமாக இருந்தபோதிலும் அதனால் பயனில்லை. உயிரைக் காத்துக் கொண்டால் தான் மற்றைய சொகுசு வாழ்க்கைக்கு மவுசு இருக்கும்.

ஒரு நாடு பொருளாதாரத்தில் தன்னிறைவு காண வேண்டுமாயின் அங்குள்ள மக்களுக்கு மன நிறைவும் போதிய உணவும் கிடைக்க வேண்டும்.

அப்போதுதான் அந்த தேசம் உத்வேகத்துடன் இயங்க முடியும். பஞ்சம், பசி, பட்டினி என்பன இல்லாத தேசம் ஒன்று உருவாக வேண்டும் என்றால் அந்நாடு விவசாயத்தில் உச்ச நிலை பெற வேண்டும். இல்லாவிடில் அந்த நாடு வளர்ச்சி பெறுவதென்பது இயலாத காரியமாகும்.

நாம் உண்ணத் தேவையான பொருத்தமான உணவு விவசாயத்தின் அடிப்படையில் பெறப்பட வேண்டும். உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது.

> **ஏழை விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான், ஏனைய தொழில்களைச் செய்வோர் சோற்றில் கைவைக்க முடியும்**

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு தற்சயம் விவசாயச் செய்கையில்; ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பெரும்போகத்தில் சுமார் 73 ஆயிரத்து 471 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. விதைப்பு வேலைகள் ஏற்கெனவே ஒக்ரோபர் மாத இறுதி வாக்கில் தொடங்கிய நிலையில் தற்போது நொவெம்பெர் 20ஆம் திகதி முடியவடைய வேண்டும் என்று திகதி நிர்ணயிக்கப்ட்டிருக்கிறது.


இதுவரை 52 ஆயிரத்து 485 ஏக்கர் நிலங்களில் நெல் விதைப்பு வேலைகள் முடிவடைந்து விட்டதாக மட்டக்களப்பு கமநல சேவைகள் பிரதி ஆணையாளர் கே. ஜெகன்னாத் தெரிவிக்கிறார்.

ஆனால் இம்முறை செய்கையில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகள் எதிர்பார்த்த உற்சாகத்தோடும் விறுவிறுப்புடனும் ஈடுபடவில்லை என்று தெரிவிக்கின்றார் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் எஸ். யோகவேள்.

அதற்குக் காரணங்கள் பல உண்டு என அவரே விவரிக்கிறார். போதியளவு உரத்தைப் பெற முடியவில்லை. கடந்த சிறுபோகத்தின்போது உர விநியோகம் கிடைக்கப் பெறாததால் நஷ்டமடைந்த விவசாயிகள் இன்னமும் அதிலிருந்து மீண்டெழவில்லை. நெல்லுக்கு உத்தரவாத விலை இல்லை.

அது ஒரு புறமிருக்க, கடந்த சிறு போகத்தின்போது அறுவடை செய்யப்பட்ட நெல்லில் பெருந்தொகையானவற்றை விற்பனை செய்து கொள்ள முடியாத கையறு நிலையில் நெல்லையும் பாதுகாத்து வைத்துக் கொள்ள வழியின்றி விவசாயிகள் அங்கலாய்த்துப் போய் உள்ளார்கள்.





கடந்த சிறு போகத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 81,097 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டது. ஆனால், கிடைத்த அறுவடையில் 590 மெற்றிக் தொன் நெல்லை மாத்திரமே நெற் சந்தைப்படுத்தும் சபையால் விவசாயிகளிடமிருந்து வாங்க முடிந்திருக்கிறது. அரசாங்கம் முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக விவசாயிகளால் விளைவிக்கப்பட்ட ஒட்டு மொத்த நெல்லையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது என்கிறார்.

இதனால், விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் விவசாயிகள், அவர் தம் குடும்பங்கள் துயரத்தில் உள்ளனர். ஏற்கனவே நெற்செய்கைக்காகப்பட்ட கடன்களை செலுத்த முடியவில்லை.

தற்போது செலவு செய்ய கையில் பணம் இல்லை. பிள்ளைகளைப் படிப்பிக்க முடியவில்லை. அரிசியைத் தவிர வேறு ஒரு பொருள்களும் வீட்டில் இல்லை. அதனால் விவசாயிகள் நாளாந்த உணவுத் தேவைக்காக ஏனைய பொருட்களை வாங்குவதற்கு வழியில்லாமல் திண்டாடுகிறார்கள்.

நெற் சந்தைப்படுத்தும் சபையினால் வாங்கப்பட்ட நெல்லுக்கும் சுமார் ஒன்றரை மாதங்கள் கழித்தே அரசாங்கத்திடமிருந்து தாம் விற்பனை செய்த நெல்லுக்கான பணத்தைப் பெற முடிந்துள்ளது.

கைவசம் மீதமிருக்கும் விற்பனை செய்ய முடியாத நெல்லை எவ்வாறாயினும் விற்பனை செய்வதற்கு விவசாயிகள் அலைகிறார்கள். ஆனால் இப்பொழுது வரை அது முடியாத காரியமாகியுள்ளது.

தனியாரும் இம்முறை விவசாயிகளிடமிருந்து நெல்லை நல்ல விலை கொடுத்து வாங்குவதற்கு ஆர்வம் காட்டவில்லை.

ஏனெனில், தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் ஏற்கெனவே விவசாயிகளிடமிருந்து வாங்கிய நெல்லை இன்னமும் களஞ்சியப் படுத்தியே வைத்துள்ளார்கள்.

அவற்றை அரிசியாக்கி விற்பனை செய்வதில் தனியார் துறையினர் அச்சத்தில் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். காரணம் அரசு வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து சந்தையில் விட்டுள்ளது.

இதனால் அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து புதிதாக நெல் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. விவசாயிகளிடமும் அரிசி ஆலை உரிமையாளர்களிடமும் போதியளவு நெல் கையிருப்பில் இருக்கும் நிலையில் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி சந்தையில் கிடைக்கிறது. இது உள்ளூர் அரிசியின் தரத்தோடு ஒப்பிடும்பொழுது வெளிநாட்டு அரிசி தரம் குறைந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு புறம் ஏன் நமது நாட்டிலிருந்து பெருந்தொகை டொலர் பணத்தை அள்ளிக் கொடுத்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும் என்று கேள்வி எழுப்புகிறார் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் யோகவேள்.

நெல்லுக்கும் உத்தரவாத விலை இல்லை. அரிசிக்கும் உத்தரவாத விலை இல்லை என்ற நிலைமை விவசாயிகளை ஆட்டங் காண வைத்திருப்பதாக யோகவேள் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மட்டக்களப்பு விவசாயிகள் பெரும்போகச் செய்கையை எதிர்கொண்டுள்ளார்கள்.

அரசு தற்சமயம் 10 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கும் பசளை மட்டுப்படுத்தப்பட்டது. அதாவது ஆகக் கூடியது 5 ஏக்கருக்குப் போதுமான உரத்தைத்தான் அரச மானிய விலை 10 ஆயிரம் ரூபாவுக்குப் பெற முடியும்.

5 ஏக்கர் என்ற அளவை விட கூடுதலான ஏக்கரில் விவசாயத்தை மேற்கொள்கின்றவர்கள் கடைகளில்தான் உரத்தை வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும்போது அரசு கொடுக்கும் மானிய விலையை விட உரத்தின் விலை இரு மடங்குக்கு அதிகமாகிறது. அதாவது ஒரு அந்தர் உரம் சந்தையில் 20 ஆயிரம் ரூபாவைத் தாண்டுகிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு வாங்குவதற்குக் கூட சந்தையில் போதியளவு உரம் இல்லை என்றும்; விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனை விட பூச்சி நாசினிகள், கிருமி நாசினிகள், களை கொல்லி இரசாயனங்களின் விலை விவசாயிகளால் சமாளிக்க முடியாதளவுக்கு விண்ணைத் தொட்டு நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## துயரங்களில் பாதியளவாவது தீர்க்கப்படுமா?

### விவசாயிகள் ஆதங்கம்

மேலும், சம காலத்தில் விவசாயிகளுக்கு சிறந்த விதை நெல் மற்றும் உப உணவுப் பயிர் விதைகள் போதியளவு கிடைப்பதில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கிடைக்கும் விதைப் பொருட்கள் முளை திறன் விளை திறன் ஆகியவை குறைந்ததாக உள்ளன என்றும் வீரியமானதாக இல்லை என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறிருக்கும் பட்சத்தில் சிறந்த விளைச்சலையும் இலாபத்தையும் தாங்கள் அடைந்து கொள்ளவில்லை என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இவை ஒரு புறமிருக்க, இலங்கையில் பல பாகங்களில் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற மோதல் மட்டக்களப்பு விவசாயிகளையும் விட்டு வைக்கவில்லை.

இன்றைய சூழலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானை-மனித எதிர்கொள்ளல் என்பது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

காட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் விவசாயிகள் தென்னை, வாழை, கரும்பு, பலா, நெல், மரவள்ளி போன்ற நீண்ட கால மற்றும்; குறுகிய கால பணப் பயிர்களை அதிகளவில் பயிரிடுகின்றனர்.

இந்தப் பயிர்கள் யானைகளுக்கு மிகப் பிடித்தமானது என்பதால் காட்டை ஒட்டியுள்ள விவசாய நிலங்களைத் தேடி காட்டு யானைகள் வெளியே வருகின்றன.

கோடைக் காலங்களில் யானைகளுக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. அந்த நோக்கத்திற்காக அவை மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவுகின்றன.

சமீப காலங்களில் கிராமங்களுக்குள் ஊடுருவும் காட்டு யானைகள் அவ்வப்போது காட்டுக்குள் துரத்தப்படுகின்ற போதும் மீண்டும் அவை தமது வழித்தடங்களில் பயணிக்கின்றன. இடைவழியில் அகப்படுவதையெல்லாம் அவை துவம்சம் செய்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் மனித உயிர்களும் பலியாகின்றன.

தாங்கள் எதிர்கொள்ளும் துயரங்களில் பாதியளவாவது தீர்க்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

# தற்கால பொருளாதார நிலையில் பெண்கள்

**பவாணி தம்பிராஜா**

இலங்கையில் உள்நாட்டுப் போர் ஓய்ந்திருக்கலாம். ஆனால், தற்கால பொருளாதார நிலையில் பெண்களின் அன்றாட வாழ்வுக்கான போர் ஓய வில்லை.

அவர்களுடைய கௌரவமான வாழ் வுக்கான, அன்றாட தேவைக்கான, வாழ் வாதாரத்துக்கான, உணவுக்கான, போராட் டமும், அவப்பெயருக்கு பயப்படும் போராட்டமும், சமூகப் பாதுக்காப்புக்கான போராட்டமும் எத்தனை தலைமுறை களுக்குத் தொடரப் போகின்றதோ என்று நினைக்கும்போது மனதில் ஒரு வகை பயம் ஒட்டிக் கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை.

வடக்கு - கிழக்கில் 89,000 பெண்கள் துணைவர்களை இழந்திருக்கிறார்கள். கிழக்கில் 26,000 பெண்களின் துணை வர்கள் மரணித்து விட்டார்கள் (2010இல் நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஹிஸ்புல்லாவினால் சமர்பிக்கபட்ட தொகை) இது தவிர வடக்கில் மட்டும் தங்கள் குடும்பத்துக்கு வருவாயைப் பெற்றுக் கொடுத்த 20,000 ஆண்கள் தற்போது அவர்கள் குடும்பத்துடன் இல்லை. (இந்த ஆண்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக இருக்கலாம், கடத்தப்பட்டு இருக்கலாம், சிறைக் கைதியாக இருக்கலாம் அல்லது இறுதி யுத்தத்தில் அல்லது அதற்கு முன் கொல்லபட்டவர்களாகவும் இருக்கலாம்).



இது தவிர வட மாகாணத்தில் மட்டும் 80% குடும்பங்களில் ஆண்கள் இல்லை என 2013 இற்கான சனத்தொகை மதிப்பீடு சொல்கிறது. இந்த 80%இல் உள்ள குடும்பங்களில் உள்ள பெண்கள், ஒன்று துணைவனை இழந்தவராக இருக்கலாம், திருமணம் செய்து கொள்ளாத முன்னாள் போராளியாக அல்லது சாதாரண பெண்ணாக இருக்கலாம். அப்பெண்கள் விவாகரத்து பெற்றவர்களாக அல்லது மேற்குறிப்பிட்ட காணாமல் ஆக் கப்படவரின் அல்லது கடத்தப்பட்டவரின் அல்லது கொலை செய்யப்பட்டவரின், அல்லது சிறையில் உள்ளவரின் தாயாக, துணைவியாக, தங்கையாக, அல்லது மகளாக இருக்கலாம். குடும்பத்தையும் பிள்ளைகளையும் பார்த்து கொண்டு வருவாயைத் தேட வேண்டிய முழுப் பொறுப்பும் பெண்களிடம் வலிந்து திணிக்கப்பட்டுள்ளது .

இதே பெண்கள்தான் காணியை விடுவிக்கச் சொல்லியும் காணாமல் ஆக்கபட்டவர்களை தேடியும் இன்னும் அலைகின்றனர், போராடுகின்றனர்.

இலங்கையில் இதுவரை நிலையாக பேணப்பட்டு வந்த அமெரிக்க டொலர், கடந்த பல மாதங்களாக நெகிழ்வு போக்குடன் தீர்மானிக்க இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது.

டொலருக்கான தட்டுப்பாடு அதிவுயர் மட்டத்தை அடைந்த பின்னணியிலேயே, இலங்கை மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எட்டியது.

இலங்கை மத்திய வங்கியின் இந்த தீர்மானம் அமுலாக்கப்பட்டதை அடுத்து, நாட்டின் பொருட்கள் மற்றும் சேவை களுக்கான விலைகள் மற்றும் கட்ட ணங்கள் எண்ணி பார்க்க முடியாதளவு திடீரென அதிகரித்திருந்தது.

இதையடுத்து, உள்நாட்டில் பஸ் கட்டணம் முதல் உணவு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைகள் மற்றும் கட்டணங்கள் சடுதியாக கட்டுப்பாட்டை மீறி அதிகரித்தது.

இதனால், மக்கள் இன்று பெரும்பாலும் வறுமையின் உச்சத்தை தொட்டுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்கள், அன்று முதல் வாழ்வதற்கு கூட முடியாத நிலையில் தமது வாழ்நாட்களை கடத்தி வந்த பின்னணியில், வாழ்க்கை செலவு பல மடங்காக அதிகரித்துள்ளமை, அவர்களை மேலும் வறுமை கோட்டின் அடி மட்டத்திற்கே கொண்டு சென்றுள் ளது.




இலங்கை வடக்கு மாகாணத்தின் பிரதான நகரமான யாழ்ப்பாணத்தில் மீன் பிடித் தொழில் மிக முக்கியமான தொழிலாக இருந்து வருகிறது. 2017ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சுமார் 21,200 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்தத் தொழிலைச் சார்ந்திருக்கிறார்கள்.

ஆனால், தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஒட்டி எழுந்திருக்கும் எரிபொருள் தட்டுப்பாடு இந்தத் தொழிலுக்கு மிகப் பெரிய சவாலாக எழுந்து நிற்கிறது.

பாரிய பொருளாதார நெருக்கடியுடன் போராடி வரும் இலங்கை இப்போது பெண்கள் விடயத்தில் மற்றொரு இக்க ட்டான நிலையை எதிர்கொள்வதாக ச ர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட் டுள்ளது.

ஆடைத் துறையில் பணியாற்றிய பெண்கள் பலர் பொருளாதார நெருக்கடி யால் வேலை இழந்துள்ளனர். இதனை யடுத்து அதில் பலர் வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலாளர்களாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையால் ஏற்படும் சிரமங்கள் பல குடும்பங்களை வறுமையின் விளிம்பிற்குத் தள்ளியுள் ளது. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற் கானஅன்றாட செயற்பாடுகளில் இலங்கை யில் பெரும் எண்ணிக்கையான மக்கள், சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த மோசமான சூழ்நிலை நாடு முழுவதும் தற்காலிக பாலியல் விடுதி களை உருவாக்கியுள்ளது. கடந்த சில மாதங்களில் பாலியல் தொழில் 30 சத வீதம் அதிகரித்துள்ளது. இங்குள்ள பெண் கள் வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலாளர்களாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று பாலின உரிமைகளுக்காக பாடுபடும் ஸ்டேண்ட் -அப் மூவ்மென்ட் லங்கா (SUML) தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னெப்போதும் இல்லாத நெருக்க டியை அடுத்து 22 மில்லியன் இலங்கையர் கள் பாரிய கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்படியாக ஏற்கனவே பல துன்பங் களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த பெண்களின் நிலை அண்மைய அரசியல் பொருளாதார சீர்குலைவுகளால் மேலும் பன்மடங்கு பாதிப்படைந்து பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாயிற்று.

இதைவிட நடுத்தரப் பிரிவுப் பெண் களும் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப நிற்கும் வேளைகளிலும் மளிகைப் பொருட்களை வாங்க வரிசையில் நிற்கும் நேரங்களிலும் பலவாறு சிரமப் பட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

இன்றைய இந்தச்சிக்கலானநிலை உயர் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களை விட்டு வைத்ததா என்றால் அதுவும் இல்லை. பெருநகர்ப்பகுதிகளில்அண்மையில்நடை பெற்ற போராட்டங்களில் பங்கு பற்றிய உயர் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களும் தீவிரமான போராட்டங்களின் போது உளவியல் ரீதியாக வெகுவாகப் பாதிக் கப்பட்டு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட் டனர்.

பல பெண்கள் பொருளாதாரச் சிக்கல் காரணமாக வெளிநாடுகளுக்குப் படையெ டுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை யிலும் இவர்கள் பிரயாணத் தரகர்களாலும் வெளிநாட்டு முதலாளித்துவத்தாலும் வெகுவாகப் பாதிப்படைகின்றனர். இலங்கையில் இந்த நிலை தொடர்ந்தால் மேலும் என்னென்ன அவலங்கள் ஏற்படுமோ என்று எண்ணிப் பதக ளிக்கும் நிலையில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இவையெல்லாவற்றுக்கும் என்ன தீர்வு என்பது பற்றிச் சிந்தித்துச் செலற்பட வேண்டிய கடப்பாடு அனைவர்க்கும் உண்டு.

# யோக ஆசனங்களின் மகிமை

கலாபூசணம்
யோகாசன கலாநிதி கா.சந்திரலிங்கம்

## சாசாங்காசனம்



சமஸ்கிரதச் சொல்லான சசாங்காசனத்தின் தமிழ் அர்த்தம் சந்திராசனம் எனப்படுவதாகும். இவ்வாசனத்தில் முதுகு வளைந்து உடல் சந்திரனைப் போன்று காணப்படுவதனால் இதனை சந்திராசனம் என கூறுவர்.

**செயல்முறை:**

முதலில் வஜ்ராசனத்தில் அமரவும். வஜ்ராசனம் செய்யும் முறை பற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம். வஜ்ராசனத்தில் முதுகு முள்ளெலும்பு வளையாது நிமிர்ந்து உடலை வைத்துக் கொள்ளவும். இரண்டு கைகளையும் இடுப்புக்கு பின்னால் கொண்டு வரவும். இடது கைகளால் வலது கைகளின் மணிக்கட்டை பிடித்துக் கொள்ளவும்.

நன்கு மார்பை விரித்து மூச்சை உள்ளெடுக்கவும். மெதுவாக மூச்சை வெளியில் விட்டுக் கொண்டே முன்னால் குனிந்து நெற்றியால் தரையைத் தொடவும். இந்நிலையில் மூச்சை உள்ளிழுத்து வெளி விடவும். கூடிய அளவு இரண்டு நிமிடங்கள் செய்யவும்.

நெற்றியால் பூமியை தொடா விட்டாலும் முடிந்த அளவு குனிந்து இதனை செய்யவும். மனத்தை முழுமையாக வயிற்றின் உள்ளுறுப்புகளில் செலுத்த வேண்டும். சிறுகுடல், பெருங்குடல், கல்லீரல், மண்ணீரல், இரைப்பை போன்றவற்றை மனக் கண்ணால் பார்த்து அவைகள் ஆரோக்கியம் அடைவதாக ஆழமாக நினைக்கவும்.

மனதை முகத்துக்கு கொண்டு வந்து முகத்தில் உள்ள உறுப்புகளை அவதானிக்கவும். முழுமையாக மனதை செலுத்தி கண் நோக்கு போன்றவை ஆரோக்கியமடையதாக எண்ணவும். ஆசனம் முடிந்ததும் மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே பழைய நிலைக்கு வரவும்.

சற்று ஓய்வெடுத்து மீண்டும் வலது கையால் இடது மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு மெதுவாக முன் சென்னது போல் குனிந்து ஆசன நிலைக்குச் செல்லவும். இரண்டு நிமிடங்கள் ஆசன நிலையில் இருக்கவும். மீண்டும் மெதுவாக மூச்சை உள்ளெடுத்துக்கொண்டே பழைய நிலைக்கு வரவும்.

**பயன்கள்;**

வயிற்றில் உள்ளுறுப்புகளான கல்லீரல்,மண்ணீரல், கணையம், சிறுகுடல் இரைப்பை போன்றன ஆரோக்கியம் அடைகின்றன. இவ்வாசனம் இடுப்பெலும்பை உறுதிப் படுத்துவதோடு நரம்புகளுக்கும் புத்துணர்ச்சி அளிக்கின்றது.

வயிறு, இடுப்பு பகுதி போன்றவற்றில் உள்ள கொழுப்பைக் குறைக்கின்றது. முதுகு வலியை போக்குகின்றது. முகத்தில் உள்ள உறுப்புகளுக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது. இவ்வாசனத்தை இரண்டு நிமிடங்கள் செய்தால் போதுமானது.

- ஆண்மை குறைவை அகற்றுகின்றது மலச்சிக்கலை போக்குகிறது. பெண்களுக்கு உண்டாகும் மாதவிலக்கு சம்பந்தமான நோய்களையும் அகற்றுகின்றது. இவ் வாசனத்தைப் பத்மாசனத்தில் இருந்தும் செய்யலாம்,
- மூட்டுவாதம், நீரிழிவு நோய் உள்ளவர்கள் இவ்வாசனத்தை தவிர்க்கவும்.

## யோகமுத்ரா

மூன்று நிலைகளாக இவ்வாசனத்தைச் முதலில் வஜ்ராசனம் செய்யவும்.

**நிலை 1**



படத்தில் உள்ளவாறு பெரு விரல்களை உள்ளங்கைக்குள் வைத்து ஏனைய விரல்களை மடித்துக்கொள்ளவும். கைகள் இரண்டையும் வயிற்றின் அடிப்பகுதியில் வைக்கவும். நன்கு நிமிர்ந்து மூச்சை உள்ளிழுக்கவும். மெதுவாக மூச்சை வெளிவிட்டுக் கொண்டே முன்னால் குனியவும். நன்கு வயிற்றை சுருக்கி (எக்கி) கைகள் இரண்டும் அடிவயிற்று பகுதியை அமுக்க கூடியவாறு வைத்துக் கொள்ளவும். மெதுவாக சுவாசிக்கவும். வயிற்றில் உள்ள உறுப்புகளை அவதானிக்கவும். மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே முந்திய நிலைக்கு வரவும். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளவும்.



**நிலை 2**

கைகளை நடு வயிற்றுப் பகுதியில் வைத்து முன் சொன்னது போல மூச்சை வெளியில் விட்டுக் கொண்டே முன்னால் குனியவும். ஆசன நிலைக்கு வந்ததும் நன்கு ஆழமாக சுவாசிக்கவும். இந்நிலையில் இரண்டு நிமிடங்கள் இருந்தால் போதுமானது. மெதுவாக மூச்சை உள்ளெழுத்துக் கொண்டே முந்திய நிலைக்கு வரவும். சற்று ஓய்வெடுத்துக் கொள்ளவும்.

**நிலை 3**



படத்தில் உள்ளவாறு நிமிர்ந்து இருக்கவும். முளங்கால்களை சற்று அகலமாக வைத்துக் கொள்ளவும். படத்தில் உள்ளது போல் கைகளை வலது தொடையின் அடிப்பகுதியில் வைக்கவும். சற்று வலது பக்கம் சரிந்து மூச்சை வெளி விட்டுக் கொண்டே முன்னால் குனியவும். ஆசன நிலையில் மூச்சை உள்ளிழுத்து வெளி விடவும். ஒரு நிமிடம் இருந்தால் போதுமானது மெதுவாக மூச்சை உள்ளிழுத்து கொண்டே பழைய நிலைக்கு வரவும். சற்று ஓய்வெடுத்து இதேபோன்று மறுபக்கம் செய்யவும்.



சசாங்காசனம் செய்யும் பொழுது கிடைக்கும் அதே பலன்கள் இதற்கும் கிடைக்கும். பெண்களுக்கு மிகவும் உகந்த ஆசனம். உணவு நன்கு சமிபாடடைந்து பசியை உண்டா க்கும். தொந்தி குறையும்.வயிற்றில் உள்ள கொழுப்புக்கள் கரையும். கல்லீரல் மண்ணீரல் பித்தப்பை பங்கிரியாஸ் நன்கு தொழிற்படும். மலச்சிக்கல் அகலும். வாய்வுத் தொல்லைகள் நீங்கும். இடுப்பு எலும்புகளை பலப்படுத்தும். முதுகு முள்ளந்தண்டு வலுப்படும்.



மூட்டுவாதம் உள்ளவர்களும் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தவர்களும் இவ்வாசனத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.



## சிறுகதை

### எஸ். ஜோன்ராஜன் (1941)

மட்டக்களப்பில் பிறந்தார். முழுப்பெயர் சூசைப்பிள்ளை ஜோன்ராஜன். வீரகேசரியிலும் பின்னர் தினகரனிலும் உதவி ஆசிரியராகவும், செய்தி ஆசிரியராகவும் பணியாற்றினார். இவரது "போடியார் மாப்பிள்ளை" நாவல் வீரகேசரியில் 1978இல் வெளியாகி அரச சாகித்திய விருது பெற்றது. வீரகேசரியில் தொடர்கதையாக வெளிவந்த "ஒரு கிராமத்து அத்தியாயம்" 2018இல் நூலுருப் பெற்று கொடகே தேசிய சாகித்திய விருது, அரச சாகித்திய விருது, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிய சிறந்த நாவலுக்கான விருது என்பவற்றைப் பெற்றன.

1971ஆம் ஆண்டு மல்லிகை சஞ்சிகையில் வெளியான "தீட்டு" சிறுகதை இரு பாகங்களாக இப்பகுதியில் மீள் பிரசுரமாகின்றது.

# எஸ். ஜோன்ராஜனின் தீட்டு

'சுற்றுப் பிரகாரம் ஆரம்பமாகப் போகிறது! அனைவரும் எழுத்துவரிசைக் கிரமமாகச் செல்லும்படி வேண்டப்படுகிறீர்கள்!' கட்டளைச் சுவாமியாரின் கம்பீரமான கட்டளையை ஒலிபெருக்கி எதிரொலிக்க, விசுவாசிகள் ஆலயத்தை விட்டு நீங்கி, ஆலய முகப்பில் அணிவகுத்து நிற்கிறார்கள். ஒவ்வொருவர் கரங்களிலும் இடம் பெற்றிருக்கும் மெழுகுவர்த்திகளின் ஒளிச் சுடர் காற்றினால் அலைக் கழிக்கப்படத் தம்மைத் தாமே அணுவணுவாகவுருக்கி உருவத்தைத் தேய்த்துக் கொள்கின்றன.

'பிரியத்தினாலே பூரணமானவனே வாழ்க...'

உபதேசியாரின் செபம் ஒலிபெருக்கி வழியாக நைந்து உருக்குலைந்து ஈனஸ்வரத்தில் வெளிவருகிறது. தமது கண்டத் தொனியைப் பற்றி எப்போதும் குறைபாடு கொண்டுள்ள உபதேசியார், தமது தொனி இன்று எல்லாவிதச் சத்தம் சந்தடிகளுக்கும் மேம்பட்டு,பலரின் கவனத்தைக் கவரும் வண்ணம் ஓங்கி ஒலிப்பதைக் கேட்டுத் தன்னாமுனைக் கிராமத்தில் யாருக்குமே கிடைக்காத ஒலிபெருக்கியில் பேசும் பாக்கியத்தை வருடாவருடா தனக்கு நல்கும் இந்தத் திருநாளை யெண்ணி இறும்பூதெய்துகிறார். அதன் உந்துதலால் ஆரம்பத்திலேயே குரலொலியை உயர்த்த முயன்று குரல் அடைக்க, தொண்டை கமற, ஏற்கெனவே இருந்த நிலையைவிட மோசமாக்கிக் கொள்ளுகிறார். இந்த அபஸ்வரக் குழறுபடியைக் கவனியாமல் விசுவாசிகள் வாய்க்குள்ளே செபத்தை முணுமுணுத்துக் கொண்டு மெதுவாக ஒருவர் பின் ஒருவராக நடக்கிறார்கள். கோயில் அண்ணாவியார் அருளப்பு, தமது பருத்த உடலைச் சரிகைக்கரைவேட்டி, பட்டுச் சால்வை அலங்கரிக்க, ஊர்வலத்திடையே நிலப் பாவாடை விரித்துக் கொண்டிருந்த சலவைத் தொழிலாளர்களை அதட்டியும், குறுக்கும் நெடுக்குமாக ஓடித்திரியும் சிறுவர் சிறுமியரை அடித்து அச்சுறுத்தியும் 'பெட்றோமாக்ஸ்' தூக்கும் ஆட்களைக் கண்டித்து மிரட்டியும், தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்.

வெளியூர்களிலெல்லம் இருந்து 'வேஸ்பரில்' பங்குபற்ற வந்திருக்கும் நூற்றுக் கணக்கான பக்தகோடிகள் முன்னிலையில் தன்னாமுனையின் தன்னிகரற்ற தலைவன் தான் தான் என்பதை எடுத்துக் காட்ட இதைவிட வேறு சந்தர்ப்பம் கிட்டுமா? இடையிடையே தன்னுடைய முகக் கடுமையை மாற்றி தங்கப்பல் பளிச்சிட அசட்டுத்தனமாக இளித்துக் கொள்கிறாரென்றால், யாரோ ஒரு பெண்ணுடைய கவனத்தை அவர் கவர்கிறார் என்றுதான் அதற்குப் பொருள்!

'பாவாலும் மணப்பூவாலும் சூசை தாத்தாவைத் துதிப்போம்..' வெண்புறாக்களைப் போல உடைதரித்த இளங்கன்னியர்கள் இருமருங்கிலும் நின்று வாழ்த்திசைக்க, ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க, கிராமத் தலைவர்களான பரம பக்தர்கள் பொரியெறிய, பட்டாசுகள் பறிய, பளபளப்பான காகிதங்களாலும், வண்ணவண்ண மலர்களினாலும், சிறுசிறு மின்சார விளக்குகளாலும் அழகாக அலங்கரிக்கப்பட்ட, சூசையப்பரின் திருவுருவம் தாங்கிய கூடு ஒன்றை கோயிலிலுள்ளிருந்து நால்வர் சுமந்து வருகிறார்கள். அவர்களிடையே உயர ஏற்றத் தாழ்வு காரணமாக சொரூபக் கூடு ஒரு பக்கம் உயர்ந்தும், மறுபக்கம் பதிந்தும் அலைக்கழிக்கப்படுவதும் அதனுள் தொங்கிக் கொண்டிருந்த மின்சார விளக்குகள் ஒன்றோடொன்று மோதியுடைந்து கலகலப்பதும் எல்லோருடைய கவனத்தையும் - குறிப்பாக கட்டளைச் சுவாமியாரின் கவனத்தையும் வெகுவாய் ஈர்க்க... அவரின் ஆணைப்படி அடுத்த சில நிமிடங்களில் சொரூபக் கூடு குள்ளமான இருவர் தோள்களிலுமிருந்து முன்னேஊர்வலத்தில்சென்றுகொண்டிருந்த சம உயரமுள்ள இரு இளைஞர்களுடைய தோள்களுக்கு மாற்றப்படுகின்றன. சொரூபந் தூக்குவதில் தங்களுக்குள்ள ஏகபோக உரிமை ஆரம்பத்திலேயே இப்படி அவலமாய்ப் போனதைக் கண்ட அவ்விருவரும் வெறுப்புக் கொப்பளிக்கும் கண்களால் இரு இளைஞர்களையும் நோக்குகின்றனர்...

அவர்கள் முகங்களில் வெறுப்போடு, ஆத்திரமும் ஏளனமும் கலவையிட்ட விகாரத் தன்மை ஏன்? அவர்கள் இருவரும் விரைந்து சென்று காதுக்குள் குசுகுசுக்கின்றார்களே, என்ன அது? அருளப்புவின் முகம் கறுத்துச் சிறுக்கிறது. "ஏண்டா நீங்க விட்டுக் குடுத்தீங்க?" என்று அவர்கள் மீது சீறிவிழுகிறார்.

"சாமியார் சொல்லக்குள்ள..." என்று அவர்கள் சொற்களை இழுத்துப் பறித்துக் கொண்டிருப்பதைக் கவனியாமல் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போலக் குருவானவரை நோக்கி விரைகிறார். கரத்தில் செபமாலை உருட்டியவண்ணம் தியானத்தில் மனதை இலயிக்க விட்டுக் கண்மூடி நின்றுகொண்டிருந்த சுவாமியாரின் சாந்தத்தின் காந்தி வீசும் முகத்தைக் கண்டதும் அருளப்புவின் நடைவேகமும் உள்ளக் குமுறலும் வெகுவாய்க் குறைய... உள்ளடங்கிய குரலில் சிறிதுநேரம் அவரிடம் எதையோ பேசுகிறார்.

சுவாமியாரின் கண்கள் சொரூபக் கூட்டை நுணுகி ஆராய்வன போல உன்னிப்பாக நோக்குகின்றன.

"சொரூபக் கூட்டை இவ்வளவு நன்றாக அலங்கரித்திருக்கும் நாம், அதைச் சுமப்பதில் மட்டும் ஏன் ஓர் அலங்கோலத்தை வைக்கவேண்டும்?"

"அதுக்காக, இந்தக் கோயிலில் ஊரவர்களான எங்களுக்குள்ள உரிமையை விடச் சொல்லுறீங்களா சுவாமி?"

எதிர்க் கேள்வி போட்டு குருவின் வாயை அடைக்கச் செய்துவிட்ட தோரணையில் பெருமிதச் சிரிப்புடன் கேட்கிறார் அருளப்பு.

சுவாமியார் பார்வையைத் திருப்பாமலே கேட்கிறார். "இந்த இளைஞர்கள் யார்? உங்கள் ஊரவர்கள் தானே...?"

"ஊரவங்க தான் சுவாமி! அவங்களுக்கு இந்தச் சுரூபந் தூக்கிற விசயத்தில ஒரு விதமான உரிமையும் இல்ல"

சுவாமியார் அருளப்புவை உறுத்துப் பார்க்கிறார்.

"காரணம்...?"

"இதென்ன சுவாமி, தெரியாத மாதிரிக் கேக்கிறீங்க? அவனுக எங்களுக்குக் குடிமைத் தொழில் செய்யிற சாதி!"

சுவாமியார் கடகடவென்று சிரிக்கிறார். "நான் முன்னமே எதிர்பார்த்த ஒன்றுதான் இது!" என்று சிரிப்பினுடடே சொல்லிக் கொண்டு பெரிதாகச் சிரிக்கிறார். அந்தச் சிரிப்பின் தாற்பரியம் புரியாமல் விழித்த அருளப்புவுக்கு சிரித்து ஓய்ந்து அவர் சொன்ன பதில் இதுதான்.

"காரணம் எதுவாயிருந்தாலும் அவங்களே சுமக்கட்டும்!"

"சுவாமி...!" என்று ஏதோ சொல்ல வாயெடுக்கிறார் அருளப்பு. சுவாமியாரின் பேச்சு அதை முந்திக்கொள்கிறது...

"ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமமென்ற சித்தாந்தம், குறைந்த பட்சம் நமது காலத்திலாவது ஏற்றுக் கொள்ளப் படாவிட்டால் நமக்கென்று ஒரு மதம், ஒரு கோயில், ஓர் ஆராதனை இவைகளுக்கு அர்த்தமேயில்லை!"

"சுவாமி! இப்ப உங்கட முடிவான மறுமொழி இதுதானா...?" அருளப்புவின் பார்வையிலும் பேச்சிலும் கடுமை கூத்தாடுகிறது.

"இப்போது மட்டுமென்ன, எப்போதும் இதே பதில்தான்!" சொரூபக் கூட்டை மையமாகக் கொண்டு சுழலும் கண்கள் அப்புறம் இப்புறம் எடுக்காமல் தொனியில் கம்பீரமும் ஆணித்தரமும் மிகைப்பட பதிலளிக்கிறார் குருவானவர்.

அருளப்புவின் கண்கள் நெருப்புத் துண்டங்களாகச் சிவக்கின்றன. மீசைப் புதர் துடிதுடிக்கிறது. பின்புறமாகத் திரும்பி "டேய்...!" என்று ரௌத்திரகாரத்துடன் வீரிடுகிறார்.

பிரார்த்தனையில் மனதை ஒருமைப் படுத்தி அமைதியாய் இயங்கிக் கொண்டிருந்த ஊர்வலம் இந்த அலறலைக் கேட்டு ஸ்தம்பிக்கிறது. வெளியூரவர்களான விசுவாசிகள் என்னவோ, ஏதோவென்று கலவரத்துடன் திருப்பிப் பார்க்கிறார்கள். இந்தக் கூப்பாட்டை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் போல ஊரவர்கள் பலரும் அவ்விடம் நோக்கி ஓடிவருகிறார்கள்.

"இந்தக் கோயில் எங்கடசொத்து! இதில எங்களுக்குத் தொண்டு செய்கிற அடிமை நாய்கள் எங்களோடை சரிசமனாய் உரிமை பாராட்ட நாங்கள் விடமாட்டம்!" அருளப்புவின் வாய் தீயை உமிழ்கிறது.

"அருளப்பு...! இதுகோயில்! புனிதமான இடம்! அதப்பியம் பேசி இதன் தூய்மையைப் பாழாக்க வேண்டாம்!" அச்சமோ, சலனமோ சிறிதுமின்றிக் குருவின் வார்த்தைகள் கண்டிப்புடன் ஒலிக்கின்றன.

"நாங்கள் அதைப் பாழாக்கல்ல. மறுக்கப் படுகிற உரிமையத்தான் கேக்கிறம்!" என்று எகத்தாளம் கொந்தளிக்க உறுமுகிறார் அருளப்பு.

அவரைத் தொடர்ந்து "அண்ணாவியார் சொல்றது சரி! எங்கட உரிமையத் தாங்க சாமி!" என்று மூலைக்கு மூலையிருந்து பல கோஷங்கள் கிளம்புகின்றன.

ஊர்வலத்தில் ஒழுங்கு குலைந்து கசமுசப்பு ஏற்படுகிறது. விசுவாசிகள் அனைவரும் கும்பலில் சேர்ந்து அதன் கனத்தை மிக மொத்தப்படுத்த...?

குருவானவர் எல்லோரையும் நோக்கிக் கையமர்த்தியவாறு தொண்டையைக் கனைத்துக் கொண்டு கேட்கிறார். "நீங்கள் கூச்சல் போடுவதில் சிறிதாவது நியாயம் உள்ளதாவெனச் சிந்தித்துப் பார்த்தீர்களா? ஆண்டாண்டு காலமாக உங்களைப் போலவே இந்த ஆலயத்தில் பாத்யதையுடையவர்கள் சவரத் தொழிலாளர்கள்! அவர்கள் பணத்துக்கு மட்டும் இங்குள்ள உரிமை, அவர்களுக்கு மட்டும் இல்லாமல் போனதன் காரணமென்ன...?" அவர் இதைச் சொல்லி முடிப்பதற்குள் கும்பலிலிருந்து "நாசிவச் சுவாமி" என்றும், "செரையனுகளிட்ட ஏதோ கூடக் குறைய வாங்கிட்டார்" என்றும், வசைமொழிகள் கிளம்புகின்றன.

"காசைப் பத்திக் கதைக்க வேணாம் சுவாமி! அப்படிப் பாக்கப் போனா கோயிலால அவனுகள விட எங்களுக்குத் தான் ஏகப்பட்ட நஷ்டம்! கோயில் சோடிச்ச செலவெல்லாம் எங்கடதான்!" என்று கரங்களால் மார்பைத் தட்டி வீறாப்புடன் இரைந்தவாறே சூழ நின்ற தன் சகாக்களைப் பார்க்கிறார் அருளப்பு.

சுவாமியார் சற்று நிதானித்துவிட்டுப் பேசுகிறார். "நீங்களெல்லாம் குழப்பம் உண்டாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருப்பதாகத்தான் எனக்குப்படுகிறது. எதிர்காற்றில் நின்று துப்புவதைப் போல இதனால் உங்களுக்குத்தான் அவமானம். என்றாலும் நான் நியாயத்தின் பக்கந்தான் நிற்கவேண்டியிருக்கிறது. இந்த சொரூபம் தூக்கும் வேலை உங்களுக்கும் வேண்டாம்! அவர்களுக்கும் வேண்டாம்! எனது ஊழியர்களே செய்வார்கள். தயவு செய்து எல்லோரும் அமைதியாகச் சுற்றுப் பிரகாரத்துக்குச் செல்லுங்கள்!"

அருளப்பு எகிறிக் குதிக்கிறார்.

"அப்படியா சங்கதி? அப்படியெண்டால் நாங்களும் இந்தக் கோயிலுக்கு வேணாம்!" என்று அடிபட்ட வேங்கையாய் உறுமிய அவர் "எல்லோரும் வாங்கடா" என்று ஆவேசத்துடன் அழைத்தவாறே தம் ஆட்கள் பின்தொடர ஆலயத்தை நோக்கிக் கடுகி நடக்கிறார்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஆலயத்தையும் அதன் சூழலையும் சுற்றுப் பிரகாரத்தையும் ஜோதிமயமாய் ஆக்கிக் கொண்டிருந்த 'பெட்றோமாக்ஸ்' தீபங்கள் அணைக்கப்பட்டு எங்கும் இருள் சூழ்கிறது. ஆலயத்தின் சோடனைகள் பலவந்தமாக அகற்றப்படுகின்றன.

தாங்கள் அலங்கரித்த ஆலயத்தைத் தாங்களாகவே அலங்கோலமாக்கிவிட்டு அருளப்புவின் தலைமையிலான அண்ணாவிக்கூட்டம் அட்டகாசமாக வெளியேறுகிறது.

இதர விசுவாசிகள் வெலவெலத்துப் போய் நிற்கிறார்கள்.

மிகுதி அடுத்த மாதம்...



# போதையில் மயங்கும் சமூகம்; உச்சம் தலையில் ஏறும் காமம்

இன்றைய உலகில் மனிதாபிமானம் மறந்து தவறான பாதையில் பணம் ஈட்டுவதை நோக்கமாக கொண்ட பலர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு பணம் மட்டுமே இலக்காக இருக்கும். சமூகம் சீரழிவது பற்றியோ எதிர்கால சந்ததிகள் அழிவு பற்றியோ எதுவித கவலையும் இவர்களுக்கு இல்லை. அனைவரையும் அழித்து விட்டு இந்த உலகில் எதை ஆழப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களது உறவுகளும் ஒருநாள் இந்த தீய வலையில் சிக்குப்படுவார்கள் என்பதனை மறந்து விடுகிறார்கள். அதர்மம் ஓர் நாள் அழியும் என்பதனை பல வரலாறுகள் எமக்கு படம் பிடித்து காட்டியுள்ளன.

எனவே, எமது சமூகத்தில் இலகுவாக பாதிக்கப்படக் கூடியவர்கள் வரிசையிலுள்ள பெண்கள் மற்றும் பிள்ளைகளை வலுவூட்டுவதனூடாக சமூக பொறுப்புடன் வாழ வழிகாட்டுவது நமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

காம வெறியர்களின் புதிய ஆயுதம் “ரபிட்னோல்” என்ற காம மாத்திரை ஆகும். இது இலகுவில் கரையக்கூடியதும் சுவையற்றதுமான ஒரு மாத்திரை ஆகும். ஒரு மாத்திரை கொடுத்தால் சிறிது நேரத்தில் போதை ஏறி சொல்வதெல்லாம் கேட்கும் நிலைக்கு வந்து விடுவார்கள். இந்த மயக்கம் 11 தொடக்கம் 12 மணி வரை நீடிக்கும் என கூறப்படுகிறது. பாலியல் உறவுகளுக்கு உட்படுத்தப்பட்டாலும் மருத்துவ சோதனையில் கண்டுபிடிக்க முடியாது.

மேலும் தொடர்ந்து அடிக்கடி கொடுத்து வந்தால் அதற்கு அடிமையாகி விடுவார்கள் என கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண் தன் வாழ்க்கையில் தாய்மை அடையவே முடியாது என கூறப்படுகின்றது. மேலும் பல பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்கின்றனர் மருத்துவர்கள். மிக எளிதாகக் கிடைக்கக் கூடிய மாத்திரை தான் இது.

பெண்கள் வெளியிடங்களுக்கு செல்லும் போது தனியாக செல்ல வேண்டாம். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொது இடங்களில் எதுவும் குடிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது. பொதி செய்து அடைக்கப்பட்ட குளிர்பானங்களில் ஊசிகள் மூலம் இவை ஏற்படலாம்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை முகவர்களால் அதிக அளவில் கொழும்பில் அதிக இடங்களில் இம் மாத்திரைகள் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. வடகிழக்கு பகுதிகளிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கின் அதிகமான முகவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இளம் சமூகத்தை சீரழிப்பதுடன் குழந்தை பிறக்கும் வீதத்தையும் குறைக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

எனவே இது போன்ற பல்வேறு சமூகப் பிறழ்வுடைய சமூக சீரழிவை ஏற்படுத்துகின்ற பலர் இந்த சமூகத்தில் உலாவிக் கொண்டிருக்கின்றனர். எனவே, எங்களுடைய எதிர்கால சந்ததியினரை நெறிப்படுத்தி சமூகத்தில் சிறப்பான பிரஜைகளை உருவாக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் ஒவ்வொருவரும் சமூக பொறுப்புடையவர்களாக மாற வேண்டும். இத்தகைய சூழ்ச்சி வலைக்குள் எங்களுடைய இளம் சமூகம் சிக்கித் தவிக்கும் நிலையை தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தொழில்சார் ரீதியாகவும் சமூகம் சார் ரீதியாகவும் மேற்கொள்ள வேண்டும். அதாவது விழிப்புணர்வுகள், வீதி நாடகங்கள், துண்டு பிரசுரங்கள், ஊடக மாநாடுகள் என பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்தும் போது எங்களுடைய பிள்ளைகள் அதிலிருந்து மீளுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

எனவே சமூகப் பொறுப்புடையவர்களாக நாம் அனைவரும் செயல்பட வேண்டும். இன்று நீதி அமைச்சின் தகவல்களின்படி 5000 போதைக்கு அடிமையான இளைஞர்களுடைய தரவுகள் பதியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



## பெண்களே மிகவும் உசாராக இருங்கள்!

எனவே, எங்களுடைய சமூகத்துக்கு நாங்கள் செய்யும் அளப்பெரிய சேவையாக எங்களுடைய எதிர்கால சந்ததியினர் போதைக்கு அடிமையாகி, இந்த சமூகம் ஒரு இருண்ட சமூகமாக மாறாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள் நாம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

எனவே. “மதுசாலைகள் இருக்கும் மதுபானங்கள் குடிப்பதை தவிர்த்தல்” என்ற மனநிலையை போன்று “போதைப் பொருள் எங்களுடைய சமூகத்தில் எங்களை ஆட்டிப்படைக்க வந்தாலும் நாங்கள் அதில் சிக்கித் தவிக்க மாட்டோம்” என்ற மனநிலையுடன் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் தப்பிப் பிழைப்பதற்கு தக்கவகையில் நாங்கள் எங்களுடைய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். இன்று இது காலத்தின் தேவையாக உள்ளது. வாடிக்கையாளர்கள் போதைவஸ்துக்கு அடிமையான வாடிக்கையாளர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள் அதற்காக புதிய வாடிக்கையாளர்களை உருவாக்குவது இந்த போதை வியாபாரம் செய்பவர்கள் நோக்கமாக இருக்கின்றது.

சாதாரணமாக குறைந்த விலையில் ஆரம்பத்தில் கொடுக்கின்ற போதை மாத்திரைகள் காலகட்டத்தில் அந்த பிள்ளைகள் திருட்டு செயல்களில் ஈடுபட்டு வீட்டில் உள்ள பொருட்களை களவெடுத்துக் கொண்டு வாங்கி குடிக்கிற ஒரு நிலைமை உருவாகி இருக்கின்றது. அதேபோன்று பிள்ளைகள் குறிப்பாக தங்களுடைய பாடசாலைக்கு செல்லும் போது பெற்றோர் கொடுக்கின்ற சிறிய தொகையினை சேர்த்து எல்லா பிள்ளைகளும் சேர்ந்து அதை வாங்கி ஒரு பிரித்து சாப்பிடுகின்ற நிலைமை உருவாகி இருக்கிறது.

எனவே, நாங்கள் இந்த போதை என்ற விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். பாடசாலை சூழல்களில் ஆரம்பிக்கின்ற அந்த பழக்க வழக்கங்கள் பாடசாலை விட்டு வெளியேறிய போது அதிகமானவர்கள் போதைக்கு அடிமையான சம்பவங்களாக வெளி வருகின்றன. அதனால் அதற்குப் பிறகு அந்த பெற்றோர்களும் அந்த பிள்ளைகளை பாதுகாப்பதற்கு மிகவும் கடினப்படுகின்றனர். பெற்றோர்கள் கண்ணீரும் கம்பளையுமாக கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே சமூகத்தில் உள்ள அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஏனைய சமூகத்தவர்கள் அனைவரும் இதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

கிராம மட்ட அமைப்புகள், பாடசாலையாக அபிவிருத்தி குழுக்கள் போன்றன இதில் மிகவும் கண்ணு கருத்துமாக இருக்க வேண்டும். எமது சமூகம் பல்வேறு சவால்களை சந்தித்துள்ளது. அது இயற்கையாக இருக்கலாம். செயற்கையான பிரச்சினைகளாக கூட இருக்கலாம். ஆனால் இது திட்டமிட்டு இளம் சமூகத்தை சீரழிக்கின்ற செயற்பாடாகும். இந்த போதைவஸ்து வியாபாரிகளின் பின்புலங்கள் செல்வாக்குடையவர்களாக உலா வந்து கொண்டிருக்கிறார்கள். மறைமுகமாக இவர்கள் சமூகத்துக்குள் கொடுகின்ற இந்த குப்பைகள் ஒரு நாள் அவர்களது வீட்டுக்குள்ளும் வரும் என்பதை அவர்கள் உணர மறுக்கிறார்கள்.

எனவே, சமூகத்தின் நலன் கருதி திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்கின்றார்கள். எனவே பணிவாக நான் கேட்பது இந்த சமூகத்தை சீரழிக்காதீர்கள். இளைஞர்கள் அனைவரையும் போதைக்கு அடிமையாக்கி எதிர்கால சந்ததிகளை அழிக்கும் விதத்தில் உங்களது செயற்பாடுகள் இருந்தால் இந்த உலகத்தில் மிஞ்சியிருக்கப் போவது யார் என்ற கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உங்கள் காசு பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு இந்த உலகத்தில் உங்களால் வாழ்ந்திட முடியுமா? ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளை போதைவஸ்துக்கு அடிமையானால் இந்த குடும்பமே சூனியமயமாகும்.

அதேபோன்று பல்வேறு குடும்பங்கள் பாதிக்கும் போது அந்த சமூகமே சூனியம் ஆகும். அந்த சமூகமே அடிமையாகும் போது அந்த நாடு சூனியமயமாகப் போகும். போதைவஸ்து அடிமையிலிருந்து எங்களது சமூகத்தை மீட்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம். சமூக சீரழிவை ஏற்படுத்தும் இந்த போதை என்ற அரசனை கொன்றொளிப்போம். எமது சமூகத்தை மீட்டெடுப்போம்.



# கணவன் மனைவிக்கு இடையில் அன்னியோன்யம் உருவாகுவது எப்படி?

## இருவருக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படுத்தும் சில விடயங்கள்

✍ முஹம்மது நஜீம் பாத்திமா நலிபா

இப்போதெல்லாம் திருமணமாகி ஒரு வருடத்துக்குள் கணவன், மனைவிக்கு இடையே ஒரு வெறுமை ஏற்பட்டு விடுகிறது. சமூக வலைதளங்கள், வாட்ஸ்அப் போன்ற விஷயங்கள் மனிதர்களிடமிருந்து நம்மை பிரித்துவிட்டன. ஓர் இன்பத்தையோ துன்பத்தையோ முழுமையாக, உணர்வுபூர்வமாக அனுபவிக்கவிடாமல் அடுத்தடுத்து மனதை ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய விஷயங்கள் உருவாகிவிட்டன.

கணவனோ மனைவியோ ஒருவருக்கு ஒருவர் கட்டாயத் தேவை இல்லை என்ற நிலைமை உருவாகிவிட்டது. ஒருவருக்கொருவர் கொடுக்கக்கூடிய விஷயங்கள் வெவ்வேறு நபர்களிடமிருந்து வெவ்வேறு வடிவத்தில் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதை மறுக்க முடியாது.

இந்நிலையில் கணவன்- மனைவி ஒருவருக்கு ஒருவர் அந்யோன்யமானவராக ஆக என்ன செய்யலாம் என்பதற்கான சிறுசிறு யுத்திகளாக இவற்றைக் கூறலாம்.

1. யாராவது ஒருவர் பாடுவதில் திறமையானவராகஇருக்கலாம். அவர் அதிக ராகமாகப் பாடி மற்றவருக்கு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிடக் கூடாது. ஒரு மனிதனுக்கு அவன் இசைக்குரலைக் கேட்கப் பிடிக்கும். அதற்கொரு ரசிகர் இருந்தால் இன்னும் பிடிக்கும். இது தான் இதற்குப் பின்னால் உள்ள உளவியல். கணவரும் மனைவியும் இப்படிப் பாடும் போது நிச்சயம் மனம் ஒன்றிணையும். இருவருக்கும் அது ஒரு நல்ல பொழுதுபோக்காகவும் அமையும். மனம் ஒருவரை ஒருவர் தேடும்.

2. பதற்றப்படும் சின்ன விஷயங்கள் பற்றியும் தெரிந்துகொண்டு அதைச் செய்யாமல் இருங்கள். 'உன் உணர்வுகளை இப்படி மதிக்கிறேன்' என்பதை வெளிக்காட்டியும் விடுங்கள்.

3. கணவருக்கும் மனைவிக்கும் ஒருவரிடம் ஒருவர் அவரவர் சிறுவயது, பள்ளி, கல்லூரி அனுபவங்களை பகிர்ந்து கொள்ள ஆசையிருக்கும். பல நேரம் சொன்ன சம்பவங்களையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருப்போம். நமக்கும் தெரியும், பார்ட்னர் இதை ஏற்கெனவே நம்மிடம் பகிர்ந்திருக்கிறார் என்று. இருந்தாலும் துணை அதைச் சொல்ல ஆசைப்படும்போது ஆர்வமாகக் கேட்க வேண்டும்.

4. சின்னச் சின்ன விஷயங்களில் உங்களுக்கு இருக்கும் பயத்தை துணையிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்.

5. ஒரு வயதுக் குழந்தையை மடியில் போட்டு எப்படி கூச்சமில்லாமல் கொஞ்சுவீர்கள்... அப்படி உங்கள் துணையை உங்கள் மடியில் வைத்து அன்பாக கொஞ்சுங்கள். கொஞ்சுவதென்றால் அன்பான வார்த்தைகளை ஆங்காங்கே பன்னீர் தெளிப்பது போல் தெளிப்பது இல்லை. ஆள் மனதில் இருந்து வர வேண்டும்.

6. துணை தனது எதிர்பாலின நட்பைப் பற்றி பேசும்போது அதைக் காது கொடுத்துக் கேளுங்கள். மனைவி தன் தோழன் பற்றியோ, கணவர் தன் தோழி பற்றியோ பேசும்போது அவர் தன் துணையின் ரியாக்ஷனை கூர்ந்து கவனிப்பார்.

'இவள்/ இவன் நாம் சொல்வதை சரியான நோக்கத்தில் எடுத்துக் கொள்கிறானா/கொள்கின்றாளா.... அல்லது நாம் பேசுவது பிடிக்கவில்லையா' என்று பார்ப்பார்.

அப்போது கேட்பவர் எரிச்சலான அல்லது சலிப்பான முகபாவனையை வெளிப்படுத்தினால் சுருண்டு விடுவார்.

அதற்கு இடம் கொடுக்காமல், அவர் பேசுவதை ஆர்வமாகக் கேளுங்கள், சிரியுங்கள். ஏன் தேவையில்லாத விஷயத்த எல்லாம் டிஸ்கஸ் பண்ற என்று சொல்லிவிட கூடாது.

கணவன், மனைவி இருவருக்கும் பக்குவம் இருக்கும். எனவே, துணைக்கு யாரிடம் எப்படிப் பழக வேண்டும் என்று நிச்சயம் தெரிந்திருக்கும் என்பதான நம்பிக்கையிலேயே வாழ்க்கையை கொண்டு செலுத்துங்கள். நீங்கள் துணைக்கு சுவாரஸ்மானவராக நிச்சயம் தெரிவீர்கள்.

7. துணையின்சிறுசிறு அவமானங்களை 'பிறகு' பேசுங்கள். இந்த 'பிறகு' என்ற வார்த்தை முக்கியமானது. மனைவியும் கணவரும் ஒரு கடைக்கு போயிருப்பீர்கள். கணவருக்கும் கடையில் உள்ளவருக்கும் சண்டை வருகிறது. கணவரை ஏதோ திட்டிவிடுகிறார்கள். கணவருக்கு அவமானம். சம்பவம் முடிந்த பிறகு அது பற்றியே மனைவியிடம் பேசிக் கொண்டு வருவார்.

'ஆமா நீங்க செய்ததுதான் சரி. அவன் தப்பா நடந்துகிட்டான்' என்றுதான் மனைவி சொல்ல வேண்டும். துணை சொல்வதை காது கொடுத்து கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவர் மனக்குமைச்சலை வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும். பிறகு ஒருநாள் அந்தப் பதற்றத்தில் இருந்து துணை மீண்ட பிறகு அந்தச் சம்பவம் பற்றி ஆலோசித்து, யார் மீது தவறு என்று துணைக்கு புரியும் படியாக கூற வேண்டும்.

அந்தச் சூழ்நிலையை எப்படி எதிர்கொண்டிருக்கலாம் என்று பேசலாம். இந்த 'பிறகு' பேசுவது ஆண், பெண் அன்பின் நெருக்கத்தை அதிகரிக்கும்.

8. சந்தர்ப்பம் கிடைக்கும்போது ஜோடியாக ஓர் இயற்கையை ரசித்து அமர்ந்து பேசிக் கொண்டிருக்கலாம். பெரிய மலையோ, பெரிய ஆறோ, பெரிய அணையோ, பெரிய நட்சத்திரக் கூட்டத்தை பார்த்தபடியோ இருக்கலாம். கடலைப் பார்த்து அமர்ந்து பேசுவது மிகச் சிறந்த விஷயம். ஒன்றாக அமர்ந்து இயற்கையை ரசிப்பது போன்று பிரியத்தை வளர்க்கு விஷயம் கிடையவே கிடையாது. துணையோடு அடிக்கடி தனியாக கடற்கரைக்குச் சென்று பாருங்கள். மாற்றம் உணர்வீர்கள்.

9. அன்றாட வாழ்க்கையில் உங்கள் துணை தூங்குவதை ஓரளவுக்கு கண்காணித்துக் கொண்டே இருங்கள். அவர் சரிவரத் தூக்கமில்லாமல் அரைகுறையாகவோ, அல்லது உறங்காமலே இருக்கலாம். ஏதோ ஒரு வெறுமை அவர்கள் மனதில் இருக்கலாம்.

காலையில் நல்ல மூடில் இருக்கும் போது, 'ஏதாச்சும் வெறுமையான ஃபீல்ல இருக்கீங்களா?' என்று பேசலாம். கேட்டுவிட்டு துணை அது பற்றி பேசினால் கேட்டுக் கொள்ளுங்கள்.

உண்மையான காரணத்தை மறைத்து வேறு ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லலாம். அதையும் நம்புவதாகக் கேட்டுக் கொள்ளுங்கள். அதுவே துணைக்கு மிகுந்த மனநிம்மதியைக் கொடுக்கும். 'வார்த்தையால் விளக்க முடியாத நம் வெறுமையைக் கண்டு கவலைப்பட்டு அக்கறைப்பட ஒருத்தி இருக்கிறாள்' என்ற உணர்வே மிகுந்த பிரியத்தைக் கொடுக்கும்.

10. துணையின் இன்பமான பொழுது போக்கை எப்போதும் நக்கல் செய்யாதீர்கள். 'ஃபேஸ்புக்ல எழுதுறது ஒரு வேலையா? அதுக்கு நாலு பேர் சும்மானாலும் லைக் போடுவான்' என்று சொல்லிவிடாதீர்கள்.

'மெஹா சீரியலில் என்ன இருக்கு? இவ்வளவு அறிவா பேசுற அதைப் போய் பாத்துகிட்டிருக்க' என்று சொல்லாதீர்கள். அவரவரது பொழுது போக்கு அவரவருக்கு பிடித்தமானது தான். பிடித்த காரணத்தினாலேயே அவர்கள் அதில் ஈடுபடுகிறார்கள்.

குடும்ப வாழ்க்கையில், பொருளாதார ரீதியாக ஒரு திட்டமிடல் மனதுக்குள் ஓடிக்கொண்டே இருக்கும். அதேபோல, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் எப்படி ஈர்க்க வேண்டும் என்ற திட்டமிடலும் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் பெண்ணை அடிமையாக வீட்டுக்குள்ளே வைத்திருந்த சமூகநிலை இருந்தது. பின்னர், ஆணைக் கண்காணிக்கும் சமூகநிலை இருந்தது. ஒழுக்கம் ஒழுக்கம் என்றதொரு வெற்றுக் கற்பிதம் சமூகத்தில் இருந்தது. இவற்றால் ஆண், பெண் திருமணம் செய்துகொண்டாலே, பிடித்திருக்கிறதோ பிடிக்கவில்லையோ பிரியத்தோடு இருப்பதாகக் காட்டிக்கொண்டார்கள்.

ஆனால் இக்காலத்தில் இந்த சமூகநிலைகள் அனைத்திலும் மாற்றம் நேர்ந்திருக்கிறது. பெண் வீட்டை விட்டு வெளியே வந்து சுதந்திரமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டாள். ஆணை சமூகம் கண்காணிப்பதில்லை.



# விமர்சனங்கள் ஆரோக்கியமானவை : உள்ளத்தின் வெளிப்பாடு

**வித்தகம்**
**கா. சாந்தகுமார்**

*NM.Nouzath. BA,*
*Dip in Counseling, Dip. in Sp. Edu*
*Psychological Counselor,*
*Kalmunai.*

விமர்சனம் என்பது ஈகோவின் பாதுகாப்பு வடிவமென உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இது குழந்தைப் பருவத்திலிருந்து ஒருவரில் வளர்கிறது. இதனால்தான் சொல்வார்கள் உள்ளத்தின் வெளிப்பாடாக விமர்சனங்கள் அமையும்.

விமர்சனங்கள் பொதுவாக நன்மை பற்றி தீர்ப்புச் செ ால்வதாக அல்லது பிழைகளை சுட்டிக்காட்டுவதாக மற்றும் பகுப்பாய்வு செய்வதாக அமையும். விமர்சிப் பவர்கள் தள்களது உள ஆதங்கங்களை வெளிப்படுத்தி மனதளவில் சுகம் அடைகின்றார்கள். அதேநேரம் விமர்சிக்கப்படுபவர்கள் மனஅழுத்தங்களுக்கு உள்ளா வார்கள் என்பதை மறந்து விடுகின்றார்கள்.

விமர்சிப்பவர் எந்த சூழலில் இருந்து விமர்சித்தாலும் அவரின் அடித்தளத்தை சிந்தியாது விமர்சிக்கப்பட்ட விடயத்தில் உள்ள கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை தன்னுள் ஆய்வு செய்து நமது இலக்கை நோக்கிய பயனத்தை தொடரவேண்டும். மாறாக விமர்ச னத்தின் போது வாதிடுவது மனமுறிவுகளையும் உடல் உளரீதியான சோர்வினையும் ஏற்படுத்தி விடும்.

அரசியல், பொது சேவைகளில் ஈடுபடுபவர்கள் அதிகம் விமர்சிக்கப்படுகிறார்கள். அவ்வாரனவர்கள் தொடர்பான எதிர் மறையான விமர்சனங்களே வெளியிடப்படுகிறது. இதன்போது ஒரு கேள்வி எழுகிறது விமர்சிப்பவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் நம்மை மாற்றிக்கொள்வதா? அவ்வாரான அவசியம் இல்லை இவ்வாறான விமர்சனங்களை ஆரோக்கியமாக ஏற்றுக் கொள்வோம்.

கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின் செருப்பு காணாமல் போனது. அச்சிறுவன் கடற்கரை மண்ணில்“கடல் மாபெரும் திருடன்” என்று எழுதினான்.

அப்போது கொஞ்சம் தூரத்தில் ஒருவர் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தார் அவரின் வலையில் அதிகளவு மீன் சிக்கியது அவர் கடற்கரை மண்ணில் “இக்கடல் பெரும் கொடையாளி” என்று எழுதினார்.

இன்னும் ஒருவர், அவர் மீது அதிக பாசமாக இருந்த தகப்பன் கடலில் நீந்தி மூழ்கி விட்டார். “கடல் ஒரு கொலைகாரன்” என்று கடற்கரை மண்ணில் எழுதினார்.

ஒரு வயதான முதியவர் கடலுக்குள் போய் முத்துக்களை எடுத்து வந்தார். அவர் சந்தோஷத்தில் மூழ்கி கடற்கரை மண்ணில்“கடல் ஒன்றே போதும் நான் ஆயுள் முழுக்க செ ல்வந்தனாக இருக்கமுடியும்” என்று எழுதினார்.

அப்போது கடலிலிருந்து பெரிய அலை வந்தது எழுதிவைத்த அனைத்தையும் அழித்து விட்டது.

இந்தக் குட்டிக் கதையை நான் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் மற்றவர்கள் கூறும் விமசனங்கள் அனைத்தையும் காதில் கேட்காதீர்கள்.

இந்த உலகத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத் தில் பார்ப்பார்கள். எல்லா விமர்சனத்திலும் நல்லதும் இருக்கும், தீமையும் இருக்கும். நல்லதை மட்டும் எடுத்துக் கொண்டு தீமையை மறந்து விடுங்கள்.

அப்போதுதான் மற்றவர்களோடு நல்ல உறவு ஏற்படுத்த முடியும்.

உறவுகள் நிலைத்திருக்க வேண்டுமென்றால் அவர்களின் எதிர்மறையான விமர்சனங்களை மனதில் இருந்து அழித்து விடுங்கள்.

அவர்கள் செய்த தப்புக்காக நட்பை அழித்து விடாதீர்கள்.

யாராவது நமக்கு விரோதமாக விமர்சித்தால் அல்லது பேசினால் அதைவிட அதிகம் அவர்களை தண்டிக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைத்துவிடாதீர்கள்.

கெடுதி செய்து, அவமானப்படுத்தியவர்களையும் அரவணைத்து செயற்பட முயலுங்கள்.

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி: குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் சம்பியன்




மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 2022 ம் ஆண்டுக்கான கரப்பந்தாட் டச் சுற்றுப் போட்டியில் குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் மற்றும் மட்டக்களப்பு எவர் சைன் விளையாட்டு கழகம் என்பன இறுதிப்பலப்பரீட்சையில் தெரிவாகியுள்ளது.

இதன் போது 3 / 2 எனும் கணக்கில் குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் முதலிடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது.

சிவானந்தா விளையாட்டு கழகத்தின் 50 வருட நிறைவை முன்னிட்டு கழகத்தின் தலைவர் கே.யோகராஜா தலைமையில் சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட 6 பேரை கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தை சே ர்ந்த 9 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி குறித்த சுற்றுப்போட்டியில் களமாடியிருந்தது டன், இதற்கு இணையாக கடினப்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியும் நிகழ்த்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# பெரியநீலாவணை சுற்றுப் போட்டியில் சேனையூர் வின்னர் சம்பியனானது




பாண்டியூர் மீராசுந்தர்

பெரியநீலாவணை காவேரி விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் கணேஷ் தினேஸ் அவர்களின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், சேனைக்குடியிருப்பு வின்னர் அணி சம்பியனானது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட 64 அணிகளை இணைத்து நடாத்தப்பட்ட இந்த மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரானது 29/10/2022 ஆரம்பமாகி 20/11/2022 ஞாயிறு வரை பிரமாண்டமான முறையிலே இடம்பெற்றது.

64 அணிகளை உள்வாங்கி இடம் பெற்ற இத்தொடரில் அரையிறுதிப் போட்டிகளுக்கு சேனைக்குடியிருப்பு வின்னர் விளையாட்டுக் கழகம், நற்பிட்டிமுனை வாரணம் , கல்முனை சைனிங் மற்றும் கல்லாறு வினாயகர் ஆகிய அணிகள் தெரிவானது.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்று சேனைக்குடியிருப்பு வின்னர் அணியும் நற்பிட்டிமுனை வாரணம் அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி ஞாயிற்றுக் கிழமை 2.45 மணியளவில் இடம் பெற்ற இறுதிப் போட்டிக்கான நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வின்னர் அணியின் தலைவர் மதன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய வாரணம் அணி, 10 ஓவர் நிறைவில் 8 விக்கட் இழப்பிற்கு 74 ஓட்டங்களை பெற்று வின்னர் அணிக்கான ஓட்ட இலக்காக 75 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய வின்னர் அணி, ஆரம்பத்தில் ஓட்டங்களைசிறப்பாக பெற்றாலும் இடையில் விக்கட்டுகளை பறிகொடுத்து தடுமாறி இறுதி ஓவரில் 2 பந்துகளுக்கு 7 ஓட்டங்களை பெறவேண்டும் எனும் ஒரு இக்கட்டான நிலையில், வின்னர் அணி இருந்தது. அணியின் சிரேஸ்ட வீரர் சுந்தர் ஏழு ஓட்டங்களையும் அடித்தாடிய வின்னர் அணியினை 5 விக்கட்டுகளால் வெற்றிபெறச் செய்து காவேரி விளையாட்டுக் கழகத்தின் தினேஸ் ஞாபகார்த்த கிண்ணத்தினை பெற்றுக் கொடுத்தார்.

இறுதிப் போட்டியில் வாரணம் அணி சார்பாக அணியின் தலைவர் திலக்ஸன் 28 ஓட்டங்களையும் சிரேஸ்ட வீரர் பிரதி 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்கள். அத்துடன் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் வின்னர் அணியின் கௌரீஸ் தெரிவானதுடன் இச்சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக வாரணம் அணியின் சிந்து தெரிவானார். அத்துடன், தொடரின் சிறந்த கிறிக்கட் வீரராக வின்னர் அணியின் துசிகரன் தெரிவானார்.

இச்சுற்றுப் போட்டியில் காலிறுதி வரை தெரிவான அணிகள் ஒவ்வொன்றிற்கும் பணப்பரிசும் கிண்ணங்களும் காவேரி அணியினரால் வழங்கி வைத்ததுடன் இரண்டாம் இடம் பிடித்த வாரணம் அணியினருக்கு பணப்பரிசும் பெறுமதியான வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதுடன் 64 அணிகளுள் சம்பியனாக தெரிவான வின்னர் அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசும் 7 அடி வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டது.

இவ்விறுதிப் போட்டிக்கு பிரதம அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெயதீசன், அமரர் தினேஸ் அவர்களின் தந்தை திரு கணேஸ் அவர்களும் அவர்களுடன் கல்முனை விளையாட்டு உத்தியோகத்தர் சுலக்ஸன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் மோகன்ராஜ், ***US*** மல்டி சொப் உரிமையாளர் திரு ஸ்ரீரங்கன் மற்றும் காவேரி விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் சிரேஸ்ட உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்

மறைந்த அமரர் கணேஸ் தினேஸ் அவர்களின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியினை சிறப்பான முறையில் ஒருங்கமைத்த பெரியநீலாவணை காவேரி விளையாட்டுக் கழகத்தினர் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றனர்.















# கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் மாகாணக் கலைஞர்கள் கௌரவிப்பு!

கிழக்கு மாகாணக் கலாச்சார திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாணக் கலைஞர்களை கௌரவிக்கும் விழா நேற்று (18) திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திசாநயக்க தலைமையில் இடம் பெற்ற இந்த கௌரவிப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும், ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மத நாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளனி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜெலீல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குலதீபன், பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் கே.கோபாலரத்தினம் உள்ளிட்ட மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப் பித்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள கலைஞர்கள் இதன்போது பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து, சான்றிதழ் மற்றும் விருதுகள் போன்றவற்றை விழாவின் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான சிறந்த பாடகர்கள், எழுத்தாளர்கள், இளம் ஊட கவியலாளர்கள், புகைப்படக்கலைஞர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2020 ஆம் 2021 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக இடம்பெறாமல் தடைப்பட்டு வந்த மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு விழாவை 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தவேண்டும் என்று செயற்பட்டு வந்த கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட காலாச்சார உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரின் செயற்பாடு களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஷேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த விருதுகளை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரினால் வழங்கி வைக்கப்பட்டது.


























# கட்டாரில் களைகட்டும் கால்பந்தாட்டங்கள்




நிப்ராஸ்

உலகக் கிண்ணத்துக்கான சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளை நடத்தும் பொறுப்பை பாரமெடுத்த கட்டார், அங்கு திரண்டிருக்கும் கட்டுக்கடங்காத மக்கள் திரட்சியை கையாளும் விதம் உலகையே ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.

இங்கு, இப்போட்டியை நடத்தக்கூடாது என எதிர்த்த நாடுகளுக்கு இது பலத்த அடிதான். தொழிலாளர்களை நடாத்தும் விதம், மனித உரிமை மீறல்கள், உஷ்ணமான கால நிலையைக் காரணங் காட்டித்தான், கட்டாரில் போட்டிகள் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், மிகச் சிறிய நாடான கட்டார், சகல ஏற்பாடுகளையும் கச்சிதமாகச் செய்துள்ளது.

32 நாடுகள் மோதும் இப்போட்டிகள் நான்கு விளையாட்டரங்குகளில் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மைதானங்களும்சுமார்அறுபதாயிரம்இருக்கைகளைக் கொண்டுள்ளன. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடாத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர்தான், இந்த மைதானங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

பார்வையாளர்கள், ரசிகர்கள், ஆதரவாளர்கள்அலையெனப்படையெடுப்பதால் கட்டாரிலுள்ள சகல ஹோட்டல்களும் நிரம்பி வழிகின்றன.

இதனைச் சமாளிக்க அயல்நாடுகளிலுள்ள எல்லைகள் 24 மணி நேரமும் திறக்கப்பட்டு, அங்குள்ள ஹோட்டல்களிலும் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதுவும் போதாது என்பதற்காக, பாரிய கப்பல்கள் அரபுக் கடற்பரப்பில் நங்கூரமிட்டு, அங்கிருந்தவாறு போட்டிகள் பார்வையிடப்படுகின்றன.

போக்குவரத்து நெருக்கடி, இட நெருக்கடிகளைக் குறைக்க, அங்கு பணியாற்றும் வெளிநாட்டவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு தாயகம் அனுப்பப்படுகின்றனர். வீதிகளில், தக்க காரணமின்றி பயணிக்கும் வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. மேலதிகமாக 16,000 உணவகங்கள்திறக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு தகவல். பல, தேசங்களிலிருந்தும் வந்துள்ளோர்களது விருப்பு, சுவை, தேவைகளையறிந்து உணவுகள் தயாரிப்பதற்கு, சமையல் தயாரிப்பாளர்களும் தருவிக்கப்பட்டுள்ளனர்.



நவம்பர் 20 இல், ஆரம்பமான இப்போட்டிகள் டிசம்பர் 18 இல் முடிவடையும் வரைக்கும், அதி சிறந்த ஏற்பாடுகளைச் செய்து உலகையே அசத்தியுள்ளது கட்டார். தென்கொரியா மற்றும் ஜப்பானில் நடந்த போட்டிகளுக்குப் பின்னர் ஆசிய நாட்டில் நடைபெறும் போட்டி இது. அதுவும் அரபு நாடொன்றில் முதல் முறையாக இப்போட்டி நடைபெறுகிறது.

இதனால், சர்வதேசத்தின்கவனத்தைஈர்த்தது மட்டுமன்றி, அரபுலகில் பல, விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்லாமிய விரோத செயற்பாடுகளுக்கு கட்டார் இடமளித்துள்ளதாக அரபு லீக் அதிருப்தி தெரிவித்துள்ளதுடன், நேச நாடுகளின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் கட்டார் தன்னிச்சையாக நடந்துள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளது.

இதையடுத்தே, விளையாட்டரங்குகளில் மதுபான விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்டது. இதுபோன்ற, இஸ்லாமிய கலாசாரத்துடன் நேரடியாக முரண்படும் களியாட்டங்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதைக் கடைப்பிடிப்பதைப் பொறுத்தே அரபு லீக்குடனான கட்டாரின் நெருக்கம் தீர்மானிக்கப்பட உள்ளது. மேலும், ஈரானின் உளவாளிகள் உள்நுழைந்து (சுன்னி) அரபு நாடுகளின் அந்தரங்கங்களை அறிந்துகொள்ள இப்போட்டிகள் வழியேற்படுத்திவிடுமா? எனவும் சில அரபு நாடுகள் அச்சம் அடைந்துள்ளன.

## கச்சிதமான ஏற்பாடுகளால் உலகே ஆச்சர்யம்

பொருளாதார ரீதியில் கொள்ளை இலாபமீட்டும் கட்டார், பாதுகாப்பு விடயத்தில் கோட்டைவிட்ட கதையாக இருந்துவிடக் கூடாது என்பது தான், அயலிலுள்ள அரபுநாடுகளின் விருப்பம். ஏனைய நாடுகளின் எல்லைகள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில், சவூதி அரேபியாவுக்கு இது ஆபத்தாக அமையாமல் இருந்தால் சரிதான்.

இத்தனை சவால்களுக்கு மத்தியில் நடாத்தப்படும் போட்டிகளால் ஈட்டப்படும் அந்நியச் செலாவணியின் ஒரு பங்கையாவது, ஏழை நாடுகளுக்கு அதிலும் விஷேடமாக ஆபிரிக்காவிலுள்ள வறிய முஸ்லிம் நாடுகளுக்கு வழங்க கட்டார் முன்வர வேண்டுமென சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாடு கோரியுள்ளது. இவ்வளவு ஆவலாக ஏற்பாடுகளைச் செய்த கட்டார், முதலாவது போட்டியில் ஈக்குவடோருடன் தோற்றமை இரட்டிப்பு ஏமாற்றம்தான்.

ஆனால், அயல் நாடான சவூதி அரேபியா முதலாவது போட்டியில் ஆர்ஜண்டீனாவுடன் வென்று அரபுலகை ஆச்சர்யத்திலாழ்த்தியது. இதனால், முழுநாள் விடுமுறையும் அங்கு வழங்கப்பட்டது. இதுமட்டுமா ஆச்சர்யம். சவூதி அரேபிய வீரர்கள் சகலருக்கும் அதி நவீன ஆடம்பரக்கார்கள் (ரால்ஸ்ரொய்ஸ்) அந்நாட்டு மன்னரால் அன்பளிக்கப்பட்டதுதான் ஆச்சர்யம்.



